# தமிழரசு

16.11.1994

ரூ. 3










பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதி கிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


தூத்துக்குடியில் செம்பு உருக்காலை - மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் உரை . . . . . . . . 2

முதல் துணை மதிப்பீடுகள்: 1994-95 மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை . . . . . . . . 8

அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள் . . . . . . . . 13

கூட்டுறவே நாட்டுயர்வு! . . . . . . . . 17

படமும்-செய்தியும் . . . . . . . . 18

'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு' - நூல் வெளியீட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் உரை . . . . . . . . 20

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு மாண்புமிகு முதல்வர் அஞ்சலி . . . . . . . . 25

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா . . . . . . . . 27

"ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி" விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை . . . . . 29

ஆர். எஸ். மனோகருக்கு 'நாடகச் செம்மல்' பட்டம் வழங்கி மாண்புமிகு முதல்வர் உரை . . . . . . . . 33

தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - சிறப்பு ஏற்பாடுகளும் வளர்ச்சிப் பணிகளும் . . . . . . . . 38



தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2025

கார்த்திகைத் திங்கள்: 1

மலர்:25 இதழ்:10

16.11.1994

விலை: ரூ. 3




## இதழ்தோறும் ஓர் இனிய குறள்

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று (11)

* மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத் தக்கதாகும்.



# இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்த தொழில்வளம் மிகுந்த மாநிலமாகும்!

## தூத்துக்குடியில் 'செம்பு உருக்காலை' – 'மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை' அடிக்கல் நாட்டும் விழா: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உரை

"**து**றைமுக நகராம், தமிழகத்தின் நல்முத்து நகரமான, தூத்துக்குடி நகரில், Sterlite Industries நிறுவனத்தின், செம்பு உருக்காலை Copper Smelting Unit மற்றும் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை Lube Oil Refinery, ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, மலர்ந்த முகங்களுடன் வீற்றிருக்கும், உங்கள் அனைவரையும் காண்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வளர்ந்து வரும் துறைமுகத்தைத் தன்னகத்தே கொண்ட தூத்துக்குடி நகரில், SIPCOT தொழிற்பேட்டை வளாகத்தில், 1,300 கோடி ரூபாய் மதிப்பில், என்னால் இன்று அடிக்கல் நாட்டப்பட்ட, 2 புதிய தொழில் திட்டங்கள், தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சிப் பாதையில், மேலும் ஒரு புதிய மைல் கல், என்பதில் சந்தேகம் இல்லை. கடந்த 3. ஆண்டுகளுக்கு முன்னால், தமிழக மக்கள் அனைவருடைய ஏகோபித்த ஆதரவோடு, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, தமிழகத்தை இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சி பெற்ற, ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்க, அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறேன் என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறி






## அட்டை சொல்லும் செய்தி

வீர்கள்.

ஒரு மாநிலம், விரைந்த தொழில் வளர்ச்சி அடைய வேண்டுமென்றால், அங்கே அமைதியான சூழ்நிலை நிலவ வேண்டும்; சட்டம் ஒழுங்கை நன்முறையில் பராமரிக்கின்ற, ஓர் உறுதியான அரசு அமைய வேண்டும்; உயர் அழுத்த மின்சாரம், தங்கு தடையின்றிக் கிடைத்திட வேண்டும்; தொழில் முனைவோர் மற்றும் தொழிலாளர் உறவில், அமைதி நிலவ வேண்டும்; தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்க, அரசின் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு தான், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, 1992-ஆம் ஆண்டில், 'புதிய தொழில் கொள்கை' ஒன்றினை அறிவித்தது. கடந்த 2 ஆண்டுகளில், இந்தப் புதிய தொழில் கொள்கையினைத் தமிழக அரசு, சீரிய முறையில் செயல்படுத்தி வந்ததால் வெளி மாநிலங்களில் இருந்து மட்டுமின்றி, வெளி நாடுகளில் இருந்தும், பெரிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, இன்று அவை தமிழ் நாட்டை நோக்கி, வந்து கொண்டிருக்கின்றன.

பெருந்தொழில்கள் வளருவதற்கு, மிகப் பெரிய அளவிலான முதலீடுகள், நிச்சயமாகத் தேவைப்படுகின்றன. அதே நேரத்தில், முதலீடு செய்ய விரும்புவோர், தங்கள் முதலீட்டிற்கு இணக்கமான, உகந்த சூழ்நிலைகள் நிலவுகின்ற இடத்தைத் தான், தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த வகையில், இன்று பல்வேறு முதலீடுகளை, நமது மாநிலம், தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கின்றது, என்பதை அறியும்போது, இங்கே குழுமியுள்ள தொழில் முனைவோர்களும், தொழில் அதிபர்களும், பொதுமக்களும், மகிழ்ச்சியடைவார்கள் என்று நம்புகின்றேன்.

பெருந்தொழில்களும், சிறுதொழில்களும் வளருவதற்கு, எங்கள் அரசு, அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும், எடுத்து வருகின்றது. தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலைகளை, உருவாக்கித் தருவதோடு, தொழில் முனைவோருக்குச் சலுகைகளையும், ஒரே அலுவலகம் மூலம், தொழில் முனைவோரின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும், தீர்வு காணும் Single Window முறையையும், செயல்படுத்தி வருவதால் இன்று பல புதிய தொழில்கள், உருவாகி வருகின்றன. தொழில் அமைதி நிலவுகின்றது. வேலை வாய்ப்பு அதிகரித்து, பொருளாதார முன்னேற்றம் பெருகி வருகின்றது.

நமது மாநிலத்தில் நிலவும், இணக்கமான சூழ்நிலைகளின் காரணமாக, மின் உற்பத்தித் துறையில், தனியார் நிறுவனங்கள், அதிக ஈடுபாட்டைக் காட்டி வருகின்றார்கள். 3,800 Mega Watt மின் உற்பத்தி செய்வதற்குரிய, பல்வேறு திட்டங்களை முனைப்புடன் தீட்டி, செயல்படுத்தி வருகின்ற, தொலைநோக்குப் பார்வை கொண்ட அரசு, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த, இந்த அரசு ஆகும். 1,500 Mega Watt திறன் கொண்ட, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டம்; 200 Mega Watt திறன் கொண்ட, பிள்ளை பெருமாநல்லூர் எரிவாயு சுழலி மின் திட்டம்; 100 Mega Watt திறன் கொண்ட, குலசேகரப்பட்டினம் கடல் வெப்பத்திலிருந்து, மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஆகியவை நமது மாநிலம் மின் உற்பத்தியில், ஓர் உயர்ந்த இலக்கினை அடைய வழி வகுக்கும் என்பதைப் பெருமிதத்துடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.



**சுதந்திரம் என்பது நழுவிவிடும் இயல்பு டையது. கையில் இருப்பதுபோலத் தோன்றும். பின்னர் பார்த்தால் இராது. வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்கக்கூடிய ஒன்று. அது நம்மை அடிக்கடி ஆசைகாட்டி மோசம் செய்யும். நம்மைக் கொடிய சோதனைகளுக்கு உள்ளாக்கிய பின்னரே அது நமக்குக் கிடைக்கும்.**

---

தமிழ்நாட்டில், கடந்த 3 ஆண்டுகளில் மட்டும், 28,000 கோடி ரூபாய்க்கும் மேலான முதலீட்டில், 69 புதிய தொழிற்சாலைகளுக்கும், தொழில்களுக்கும், அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இன்று அவை, பல்வேறு நிலைகளில் வளர்ந்து கொண்டிருப்பது, தமிழகத்தின் தொழில் துறையில், ஒரு புதிய சகாப்தம் உருவாகி வருவதைத் தான் காட்டுகின்றது.

பெரிய முதலீடுகளைக் கொண்ட, புதிய தொழிற்சாலைகள், தமிழ் நாட்டில் விரைவில் அமைக்கப்பட உள்ளன. குறிப்பாக, சென்னையை அடுத்த சோளிங்கநல்லூரில் 800 ஏக்கர் நிலப் பரப்பில், SPIC மற்றும் பாலாஜி நிறுவனங்களின் கூட்டு முயற்சியோடு அமைய உள்ள "சென்னைத் தொழில் பூங்கா", Madras Industrial Park, தமிழகத்தின் தொழில் வளர்ச்சி வரலாற்றில், ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தி, உலகத் தொழில் வரைபடத்தில், தமிழகத்திற்கென்று ஓர் உறுதியான இடத்தைப் பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்- Tamil Nadu Industrial Development Corporation - TIDCO, 2,376 கோடி ரூபாய் முதலீட்டினை, வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளில் உள்ள, தொழில் முனைவோர்களிடமிருந்து பெற்று, பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. மேலும், 1,286 கோடி ரூபாய், முதலீட்டினைக் கொண்ட, புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்க, பூர்வாங்க நடவடிக்கைகள் எடுத்து முடிக்கப்பட்டுள்ளன என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று தூத்துக்குடி நகரத்தில் அமைவதற்கு, நான் அடிக்கல் நாட்டிய இந்த இரண்டு திட்டங்கள், இந்த நகரத்தின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு, அடிப்படையாக அமையும் என்று, உறுதியாக நம்புகின்றேன். அனைத்து வசதிகளையும் கொண்ட, ஒரு சிறப்பான துறைமுகத்தைக் கொண்டிருந்தாலும், SPIC நிறுவனத்திற்குப் பிறகு, வேறு மிகப் பெரிய தொழிற்சாலை, இந்தப் பகுதியில் வர இயலாத காரணத்தினால் தான், இந்தத் துறைமுக நகரம், மேலும் வளர்ச்சி அடையாமல் இருக்கிறது, என்பதை நான் உணர்ந்தேன்.

தூத்துக்குடி பகுதியின் மேம்பாட்டிற்கு, ஒரு பெரிய தொழிற்சாலையைக், கொண்டு வர வேண்டும் என்று தீவிரமாக நான் சிந்தித்துக் கொண்டிருந்த போது தான், Sterlite Industries நிறுவனத்தினர், இந்த இரண்டு தொழில் திட்டங்களைத் தமிழ் நாட்டில் அமைப்பதற்கு, தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். வெளி மாநிலங்களில் இருந்து கிடைக்கின்ற, மிகப் பெரிய தனியார் முதலீட்டைத் தூத்துக்குடியின் வளர்ச்சிக்கு, உபயோகப்படுத்த வேண்டும் என்று கருதி, இந்தத் தொழிற்சாலைகளை இங்கே நிறுவுவதற்குத் தேவையான இடம், மின் வசதி, தண்ணீர் வசதி உட்பட, அனைத்து அடிப்படை வசதிகளையும், SIPCOT நிறுவனத்தின் மூலமாகச் செய்து கொடுக்க, நான் ஆணையிட்டேன்.

தூத்துக்குடிக்கு மேலும் ஒரு, பெரிய தொழில் நிறுவனத்தைக் கொண்டுவரவேண்டும், என்ற எனது எண்ணம், இன்று நிறைவேறி, இந்த விழாவில் இவ்விரண்டு தொழிற்சாலைகளுக்கு, வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது, எனக்கு மிகுந்த மன நிறைவை அளிக்கின்றது.

தூத்துக்குடியின் தொழில் வளர்ச்சியை, மேலும் விரிவு படுத்துவதற்குத் தனியார் துறையில், Titanium Dioxide தொழிற்சாலை ஒன்றையும், புதிய எண்ணெய் சுத்திகரிப்பு Refinery யையும் நிறுவுவதற்குப் பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை, இந்த நேரத்தில், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று அடிக்கல் நாட்டப்பட்ட புதிய தொழிற்சாலைகள், தூத்துக்குடிப் பகுதியில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு, வேலை வாய்ப்பினையும், பொருளாதார மேம்பாட்டினையும் வழங்கும் என்று, பூரணமாக நம்புகின்றேன்.

மேலும், இத்தொழிற்சாலைகளைச் சார்ந்த உப தொழில்கள், பல்லாயிரக் கணக்கானோரின் வாழ்வில், ஒரு புதிய வசந்தத்தை ஏற்படுத்தும், என்பதில் ஐயமில்லை.

உலோகத் தொழில் துறை, மின் துறை, இரசாயனத் துறை, ஆகியவற்றின் விரைந்த முன்னேற்றத்திற்கும், இந்தத் தொழிற்சாலைகள் வழி வகுக்கும், என்று நான் நம்புகிறேன்.

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும், அசுர கதியில் வளர்ந்து வரு

**சமூகம் எப்பொழுதுமே பழமைப்பற்றுடையது. மாறுதல் என்றாலே அதற்குப் பிடிப்பதில்லை. அது, தான் போகிற போக்கிலேயே போய்க் கொண்டிருக்க விரும்புகிறது. தான் போகிற போக்குதான் சரியான போக்கு என்றும் அது உறுதியாக நம்புகிறது. ஆகவே நிலைமையைச் சீர்திருத்த வேண்டும் என்னும் நோக்கத்துடன் சமூகம் தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறவர்களை அது தண்டிக்கிறது.** - பண்டித நேரு

கின்ற ஒரு சூழ்நிலையில், புதிய தொழிற்சாலைகளை, நாம் உருவாக்கியே தீர வேண்டும். அதே நேரத்தில், அந்தப் புதிய தொழிற்சாலைகளினால், சுற்றுப்புறச் சூழல் கெடாமல் இருப்பதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும், எடுத்தாக வேண்டும்.

உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், அமைந்துள்ள இந்த அரசு, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்கும், மக்கள் நல்வாழ்விற்கும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்போதே, அந்தத் தொழிற்சாலையினுடைய மாசுபட்ட கழிவுகள், நன்முறையில் சுத்திகரிப்புச் செய்வதற்கும் அதன் மாசுகளை நீக்குவதற்கும் தொழிற்சாலைகளை மேற்கொண்டால் தான் அனுமதி வழங்குகிறோம். அதேபோல தான், இந்தத் தொழிற்சாலைகளுக்கு, அனுமதி வழங்கும்போதும், இதன் கழிவுகள், சுற்றுப்புறச் சூழலுக்குக் குந்தகம் விளைவிக்காத அளவிற்குக் கழிவு சுத்திகரிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும், என்று கேட்டுக் கொண்டோம்.

செம்பு உருக்காலையில் இருந்து, வெளியாகும் வாயுக்கள், காற்றை மாசுபடுத்தாத வகையில், அவற்றைப் பயனுடைய உப பொருட்களாக, மாற்றுவதற்கான ஒரு திட்டத்தையும், இந்த நிறுவனத்தினர் செயல்படுத்த ஏற்பாடு செய்துள்ளார்கள். இருப்பினும், இந்தத் தொழிற்சாலைகளை அமைத்துச் செயல்படுத்தும் ஒவ்வொரு கட்டத்திலும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, செயல்பட வேண்டும், என்று, Sterlite Industries நிறுவனத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், இப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு, வழி வகுக்கும் தொழிற்சாலை ஒன்றை, உருவாகாமல் தடுப்பதற்கு, எடுக்கப்படும் பிற்போக்கு நடவடிக்கைகளுக்கு, யாரும் ஆதரவு தர வேண்டாம் என்றும், கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிறுவனத்தின் தலைவர், மற்றும் மேலாண்மை இயக்குநர், திரு Anil Agarwal அவர்கள், இந்த விழாவிற்கான அழைப்பிதழை, என்னிடம் கொடுப்பதற்கு வந்த போது, இப்பகுதி வாழ் மக்களின், நலனைக் கருத்தில் கொண்டு, தனது தொழில் நிறுவனத்தின் சார்பாக, 50 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு மருத்துவ மனைக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். மேலும், இந்த விவரத்தை, இந்தக் கூட்டத்தின் வாயிலாக, நான் அறிவிக்க வேண்டும் என்றும், என்னைக் கேட்டுக் கொண்டார்.

தொழில் நிறுவனங்கள், சமுதாயத்தின் சொத்துக்கள், சமுதாயத்தின் வளர்ச்சியிலும் மக்களின் நல்வாழ்க்கையிலும், உண்மையான அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம், எல்லாத் தொழில் நிறுவனங்களுக்கும் உண்டு. அந்த வகையில், Sterlite Industries நிறுவனத்தின் தலைவர், மற்றும் மேலாண்மை இயக்குநர், திரு. Anil Agarwal அவர்களின், பொது நல எண்ணத்தையும், மக்கள் நல்வாழ்க்கையில் தொழில் நிறுவனங்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்கின்ற உணர்வையும், மனம் திறந்து பாராட்டுகிறேன்.

இந்த நிறுவனத்தைப் போலவே, மற்ற பெரிய தொழில் நிறுவனங்களும், மக்கள் நல்வாழ்க்கைக்குரிய சமுதாயப் பணிகளில், தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று, இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு தொழில் நிறுவனங்கள், சமுதாய நலப் பணிகளில் ஈடுபடும்போது, ஒரு புதிய விழிப்புணர்ச்சியும், ஒட்டுமொத்த மக்கள் நலனில், அனைவரும் அக்கறை காட்ட வேண்டும் என்ற உணர்வும், பெருகும் என்று உறுதியாக நம்புகிறேன். மற்ற தொழில் நிறுவனங்களும், தொழில் அதிபர்களும், எனது கோரிக்கையை ஏற்று, சமுதாயப் பணிகளை, மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

Sterlite Industries நிறுவனத்தின் சார்பில், 50 இலட்சம் ரூபாய் செலவில், மருத்துவமனை ஒன்றை, அமைத்துத் தர உள்ளார்கள், என்பதை அறிவிப்பதில், நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நிறுவனம், இந்தப் பகுதி வாழ் மக்களின், நலனைக் கருத்தில் கொண்டு, மேலும் இது போன்ற, சமுதாய நலப் பணிகளை, மேற்கொள்ள வேண்டும் என்றும், கேட்டுக் கொள்கிறேன்.

என்னைக் காண்பதற்காகவும், எனது பேச்சைக் கேட்பதற்காகவும், இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வந்துள்ள உங்கள் அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தூத்துக்குடி நகரம் மேலும் பல சிறப்புக்களை, வெகு விரைவில் பெறும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரிஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தார் ரூ.1,300 கோடி முதலீட்டில் அமைக்கவிருக்கும் செம்பு உருக்கு மற்றும் மசகு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார். இதற்கான விழா 31.10.94 திங்கட்கிழமை காலை 11.30 மணிக்குத் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரித் திடலில் கோலாகலமாக நடைபெற்றது.



அன்றைய தினம் தூத்துக்குடி நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. விழாப் பந்தல் ஒரு மாநாட்டுப் பந்தலை நினைவுப்படுத்தும் வகையில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்தது. காலை 7.30 மணியிலிருந்தே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக இன்னிசை நிகழ்ச்சி அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இன்னிசை விருந்தளித்தது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் விழா மேடைக்கு 11.30 மணிக்கு வந்தார். பல்லாயிரக்கணக்கான மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் அவரை அன்புடன் வரவேற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கையில் அமர்ந்ததும் விழா தொடங்கியது.

## ரூ.1,300 கோடி முதலீட்டில் செம்பு உருக்கு - மசகு எண்ணெய்த் தொழிற்சாலை

சீர்காழி சிவசிதம்பரம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். விழாவுக்குச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரிஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. அனில் அகர்வால் வரவேற்புரை ஆற்றினார். அவர் பேசுகையில், இங்கிலாந்து, கனடா நாடுகளின் ஒத்துழைப்புடன் ரூ.1,300 கோடி முதலீட்டில் தொடங்க இருக்கும் இத்தொழிற்சாலையில் 3,000 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். 350 மில்லியன் டாலர் அந்நியச் செலாவணியை இந்த நிறுவனம் ஈட்டும். தூத்துக்குடியில் அமையவுள்ள இத்தொழிற்சாலையில் 30 சதவிகித இடம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக ஒதுக்கப்படும் என்று கூறினார். அதைத் தொடர்ந்து திரு. அனில் அகர்வால் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார்.

ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரிஸ் நிறுவனத்தின் திட்ட அறிக்கையைக் கவியரசர் இளந்தேவன் அவர்கள் சமர்ப்பித்தார். இந்தத் தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் செம்பு கெத்தோடும் ஒரு மில்லியன் டன்

மசகு எண்ணெயும் தயாரிக்கப் படும் என்று கூறினார்.

அடுத்து, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. சின்னசாமி அவர்கள் வாழ்த்துரை வழங் கினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை யுரை ஆற்றினார்.

அவர் உரையை அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் செம்பு உருக்கு மற்றும் மசகு எண்ணெய் சுத்தி கரிப்பு ஆலைகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேடையிலிருந்த வாறே ஒரு பொத்தானை அழுத் தியதும் சுமார் 20 அடி தூரத்தில் அலங்காரமாக அமைக்கப்பட்டி ருந்த செம்புத் தகடு தொழிற்சாலை யின் மாதிரி மற்றும் அடிக்கல்லை, மூடி இருந்த வண்ணத்திரை விலகியது. தொழிற்சாலையின் மாதிரி, அந்த மேடையில் அழகுற சுழன்று அனைவரையும் கவர்ந்தது.

பிறகு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. இராமச்சந்திரன், இ.ஆ.ப., நன்றி நவில, விழா இனிதே நிறைவுற்றது.

விழாவில் அமைச்சர் பெரு மக்களும், சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்களும், பல்லா யிரக்கணக்கான பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## புதிய தொழில் கொள்கை

புதுமையான நோக்கும் புரட்சித் தலைமையும் ஒருங்கு சேர்ந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அரசின் புதிய தொழிற்கொள்கை தமிழகத் தைத் தொழில் வளர்ச்சியில் முன் னணி மாநிலமாக மின்னி மிளிரச் செய்கிறது. வளர்ச்சியடைந்த கட்ட மைப்பு வசதிகள், தகுதியும் உற் பத்தித்திறனும் வாய்ந்த தொழி லாளர்கள், இணக்கமான தொழிற் சாலை உறவுகள் மற்றும் அமைதி யான சட்ட ஒழுங்கு நிலை முத லிய மேன்மைகள் நிரம்பிய அமைதிச் சோலையாகிய தமிழகத்தில் மிகப்பெரும் நிறுவனங்களும் முதலீடு செய்ய விரும்புகின்றன. அதனால் இந்தியாவில் ஒரு சிறந்த தொழிற் பூங்காவாகத் தமிழகத் துக்குத் தன்னேரில்லாத புகழைப் பெற்றுத் தருகின்றன.

புதிய தொழிற் கொள்கையின் சீரிய மேன்மைகளும், தொழில் வளர்ச்சிக்குத் தோள் கொடுக்கும் அரசு உதவிகளும், ஸ்டெர்லைட் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமி டெட் நிறுவனத்தின் தாமிர உருக்கு மற்றும் உயவு எண்ணெய்ப் பிரிப்பு ஆகிய இரண்டு தனிப் பெரும் திட்டங்களைத் தமிழகத் திற்குத்தந்துள்ளன.

வளமிகு எதிர்காலத்தை எதிர் நோக்கி ஸ்டெர்லைட் நிறுவனத் தின் திட்டங்களான, இறக்குமதி மாற்றுத் திட்டமாய் ஆண்டொன் றுக்கு 1,00,000 டன் திறன் கொண்ட தாமிர உருக்காலை மற்றும் ஒரு மில்லியன் டன் திறன் கொண்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தூத்துக்குடி நகரின் தோள்களுக்கு அழகிய முத்தாரமாய் அமைகின்றன.

இந்த இருபெருந் திட்டங்களும் எல்லாத் தட்ப வெட்ப நிலைக்கும் ஏற்ற எழில் வாய்ந்த துறைமுக நகரான தூத்துக்குடியில் சிப்காட் தொழில் வளாகத்தில் அமைய விருக்கின்றன. தேவையான, நிலம், மின்வசதி மற்றும் நீர் போன்ற அனைத்து அமைவு வசதிகளும் சிப்காட் மூலம் வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி துறைமுகத்தின் அருகில் இருப்பதால் மூலப் பொருள் இறக்குமதி மற்றும் உற்பத்திப் பொருள் போக்குவரத்து மிக எளிதாக இருக்கும். மேலும், தூத்துக்குடி (SPIC, TAC, TTPS, ZIRCONIUM) போன்ற திட்டங்களி னால் வளர்ச்சி பெற்ற தொழில் நகரமாகத் திகழ்கிறது.

ஸ்டெர்லைட் நிறுவனத்தின் மற்றொரு திட்டம் ரூ.300 கோடி முதலீட்டில் தொடங்கப்பெறும் உயவு-மின்மாற்றி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையாகும். இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 3,80,000 டன் உயவு எண்ணெய் மற்றும் 260,000 டன் மின் மாற்றி எண் ணெய் உற்பத்தித்திறன் கொண்டு விளங்கும். மேலும் சில உதிரிப் பொருட்களையும் இவ்வாலை தயாரிக்கும்.

ஆண்டொன்றுக்கு 1.00 இலட்சம் டன் தாமிரக் கெத்தோடுகள் (Copper Cathodes) உற்பத்தித் திறன் கொண்ட தாமிர உருக்காலை இந்தியாவிலேயே தனியார் துறை யில் ரூ.1000 கோடி முதலீட்டில் முதன் முதலாக நிறுவப்படுகிறது. சுற்றுச் சூழல் மாசு நிர்ணயத்தைக் கட்டுப்படுத்தவும், கழிவுகளைப் பயன்படுத்தவும், ஸ்டெர்லைட் நிறுவனம் 3,50,000 டன் ஆண்டு உற்பத்தித் திறன் கொண்ட சல் பூரிக் அமில ஆலையையும், நாளொன்றுக்கு 350 டன் திறன் கொண்ட பாஸ்போரிக் ஆலையை யும் நிறுவ உள்ளது. இதன் மூலம் உருக்காலைக் கழிவுகள் சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் பயன் படுத்தப்படும்.

இத்திட்டங்கள் சுமார் 3000 பேருக்கு நேரடியாகவும் மறை முகமாகவும் வேலை வாய்ப்பைத் தரும் கற்பகத் தருவாகும். மேலும் ஸ்டெர்லைட் நிறுவனத்தின் இத்திட்டங்கள் உள்ளூர்த் தொழில் முதலீட்டு வளர்ச்சிக்கும் மற்றும் உதிரித் தொழிற்சாலைகள் வளர்ச் சிக்கும் வித்திட்டு, உள்ளூர் மற்றும் மாநிலப் பொருளாதார வளர்ச் சிக்குக் காரணமாக அமையும்.

இறக்குமதி மாற்றுத் திட்டமாக உள்ள இந்தத் தாமிர உருக்குத் திட்டம், ஆண்டொன்றுக்கு 350 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புடைய அயல்நாட்டுப் பொருள்களைச் சேமிக்கும் திறன் கொண்டது. மேலும் ஸ்டெர்லைட் எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டம், நாட்டின் எண்ணெய் இறக்கு மதியைக் கணிசமான அளவு குறைத்து, அயல்நாட்டுப் பணத் தையும் சேமிக்கும்.



# ஊராட்சிகளின் பொருளாதாரத்தைச் செப்பனிட மாநில நிதி ஆணையம் அமைப்பு!

## முதல் துணை மதிப்பீடுகள் 1994-95

மாண்புமிகு நிதி அமைச்சர்

**டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**

அவர்கள் ஆற்றிய உரை

(தமிழ்நாடு அரசு, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1994–95ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1994 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாளன்று ஆற்றிய உரை:)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1994–95 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன்வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மாமன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ள இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூ.494.15 கோடி நிதியொதுக்கத்திற்கு வகைசெய்கிறது. இதில், ரூ.251.72 கோடி வருவாய்க்கணக்கிலும், எஞ்சியுள்ள தொகையான ரூபாய் 242.43 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், அவசரச் செலவுகள் குறித்த சில இனங்களுக்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதி வழங்கப்படவேண்டியிருந்தது. எதிர்பாராச் செலவு நிதியில், இத்தொகைகளை மீண்டும் ஈடுசெய்வதற்காகவே, முக்கியமாக இத்துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமானதிட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

3. 1995 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தஞ்சாவூரில், நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக, புதிய சாலைகள், பாலங்கள் மற்றும் நினைவுக்கோபுரம் அமைத்தல், குடிநீர் வழங்கல், வீட்டுவசதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்காக , எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மொத்தம் ரூ.33.84 கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது. இதில், தஞ்சாவூரிலுள்ள தமிழ் பல்கலைக்கழகத்திற்கான மானியம் ரூ.1.42 கோடியும் அடங்கும். இத் தொகை துணை மதிப்பீடுகளில், சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. ஊராட்சிகள் உள்ளிட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு வாக்காளர் பட்டியல் தயாரித்தல், தேர்தல் நடத்துதல் தொடர்பாக, இந்த அரசு, மாநில தேர்தல் ஆணையம் ஒன்றை அமைத்துள்ளது. இதற்காக, சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையில் அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சிகளின் நிதிநிலையை மறு ஆய்வு செய்து, பல்வேறு வரிகள், தீர்வைகள் போன்றவை மூலம் கிடைக்கக்கூடிய நிகரத் தொகையை ஊராட்சி முதலியவற்றுக்குப் பகிர்ந்தளிக்க பரிந்துரை செய்ய வேண்டி மாநில நிதி ஆணையம் ஒன்றையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆணையம் செயல்படுவதற்கு உடனடியாக தொடக்கச் செலவுகளை மேற்கொள்ளவேண்டி, தற்காலிகமாகத் தேவைப்படுகின்ற ரூ.18.12 இலட்சம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. தமிழ்நாடு கடற்கரையோரப் பகுதியில் நிரந்தர கண்காணிப்புப் பணிபுரிவதற்காகத் தேவையான வசதிகளுடன்

கரையோரப் பாதுகாப்புப் படை ஒன்றை ஏற்படுத்தவும், தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைகளில் நடக்கும் வழிப்பறிக் கொள்ளைகள் போன்றவற்றைத் தடுப்பதற்கு "நெடுஞ்சாலை சுற்றுக் காவல் படைப் பிரிவு" ஒன்றை ஏற்படுத்தவும் அரசு அனுமதித்துள்ளது. இதற்காக தொடக்கச் செலவைச் செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட ரூ.8.84 கோடி "மானியக் கோரிக்கை 15 – காவல் துறை" என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளங்குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம்" தொடர்பாக, சென்னையிலுள்ள சிறார் நல நிலையம் – குழந்தை நல மருத்துவமனைக்கு ரூ.25 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக "மானியக் கோரிக்கை 18 – மருத்துவம்" என்பதன் கீழ், துணை மதிப்பீடுகளில், அடையாள நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகத்திற்கு ரூ.1 கோடியை, அரசு மானியமாக அனுமதித்துள்ளது. இதற்கென எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முதலில் அனுமதிக்கப்பட்ட ரூ. 25 இலட்சம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

7. 30.4.1993 ஆம் நாள் வரையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நெல் கொள்முதல் செய்தது தொடர்பாக, காவிரி கழிமுகப் பகுதிகளிலுள்ள உழவர்களுக்கு, உற்பத்தி ஊக்கத்தொகை வழங்கிய வகையில் கூடுதலாக ரூ. 11.90 கோடி தேவைப்படுகிறது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியுடன் சலுகை விலையிலான உரங்கள் விற்பனை செய்வது 1993–94 ஆம் ஆண்டு ராபி பருவத்தின் போதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கான தொடக்கச் செலவு ரூ.5.93 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.



8. இந்த ஆண்டில், பெரிய அளவிலான வேளாண் உற்பத்தித் திட்டத்தின் கீழ், சிறு பாசனத் திட்டங்கள் சிலவற்றைச் செயல்படுத்துவதற்காக, அரசு ரூ.5.88 கோடி அனுமதித்துள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வழங்கியதன் மூலம் முதற்கண் செலவிடப்பட்டுள்ள இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. தொழில்நுட்ப மேம்பாட்டிற்காகவும், சிறுதொழில்களை நவீனமயமாக்குவதற்காகவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்காகத்தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியை ஏற்படுத்த,

அரசு ஒரு கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. சதர்ன் ஸ்டகுரல்ஸ் நிறுவனத்திடமிருந்து 31.3.1992 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையிலுள்ள வழிவகை முன்பணமான ரூ.17.50 கோடியை, அரசு தள்ளுபடி செய்துள்ளது. இத்தொகைகள் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

10. திருவான்மியூரில், சென்னை பத்திரிக்கையாளர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அதன் உறுப்பினர்களுக்கு அடுக்ககங்கள் கட்டுவதற்காக அரசு உதவித்தொகையாக ரூ.51.82 இலட்சம் வழங்க அனுமதித்துள்ளது. ஊரகப் பகுதிகளில் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக அரசு, மாநில அரசின் உதவித் தொகையாக ரூ.1.50 கோடி வழங்கவும் அனுமதித்துள்ளது. இத்தொகைகள், துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

11. சேது சமுத்திரம் கால்வாய் திட்ட அறிக்கையை நாளதுவரையிலானதாக்குவதற்கான ஆய்வுப்பணியை மொத்தம் ரூ.4 இலட்சம் செலவில் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.




இதற்காக, முதற்கண் அனுமதிக்கப்பட்ட ரூ.2 இலட்சம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாகப் பெறப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

12. தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் நிலுவைகளைத் தீர்க்கவும், அதன் நிருவாகச் செலவுகளுக்காகவும், மானியங்களாக அரசு ரூ.1 கோடி அனுமதித்துள்ளது. இதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ஏற்கெனவே வழங்கிய முன்பணத்தை ஈடுசெய்ய இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு குடிநீர் துப்புரவுத் திட்டத்தை 1994–95 ஆம் ஆண்டில் செயற்படுத்தும் வகையில் தமிழ்நாடு குடிநீர்–வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட்ட வழிவகை முன்பணத்தில், ஒரு பகுதியை மானியமாகவும் மற்றொரு பகுதியைக் கடனாகவும் மாற்றுவதற்கு, அவ்வாரியத்திற்குக் கூடுதல் தொகையாக ரூ.25 கோடி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகை முறையே "மானியங்கள் 48 –குடிநீர் வழங்கல்" மற்றும் "61– மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்" என்கிற கோரிக்கைத் தலைப்புகளின் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

14. சென்னையில், புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு மூலதனப் பங்குத் தொகையாக ரூ.1 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இந்த

நிதியுதவிக்காக, தொடக்கத்தில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ.1 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து அரசுக்குச் சேர வேண்டிய கடன் நிலுவைகளில் ஒரு பகுதியைப் பங்குத் தொகையாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென, துணை மதிப்பீடுகளில் ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்திடமிருந்து அரசுக்குச் சேரவேண்டிய வழி–வகை முன்பணங்கள், வட்டித் தொகை மற்றும் கடன் நிலுவைகள் ஆகியவற்றை, இவ்வாரியத்திற்கு அரசு செலுத்தவேண்டிய மின்கட்டண இழப்பீட்டு உதவித் தொகையான ரூ.143.86 கோடிக் கெதிராக சரிக்கட்டவும் அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகையும் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

16. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து, இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்களும், இப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன. இவற்றுடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994–95 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

வணக்கம்.

இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்

சென்னை,
1994 ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள்.3 ஆம் நாள்,
பவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 18 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2025.

## கல்விச் செல்வம்

**இன்று குழந்தைகள் தினம். பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளை நாம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறோம்.**

**ஒரு சில நல்ல உள்ளங்களினால் உங்கள் வாழ்க்கையை வழிப்படுத்த முற்பட்டுள்ள நீங்கள், உங்கள் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். உலகத்திலேயே தலை சிறந்த செல்வம் கல்விதான். ஏனென்றால் ஒருவரிடத்தில் உள்ள உடைமைகளையும், உரிமைகளையும், பணத்தையும், பொருளையும், சொத்துக்களையும் ஏனைய பிற செல்வங்களையும் சந்தர்ப்பச் சூழ்நிலையால் இழக்க நேரிடலாம். அல்லது பிறர் பறிக்க நேரிடலாம். ஆனால் எவராலும் பறிக்கமுடியாத செல்வம், உங்களால் இழக்க முடியாத செல்வம் ஒன்று உண்டென்றால், அது உங்களின் கல்விச் செல்வம்தான்.**






சட்டமன்றப் பேரவையில் நவம்பர் 3-ஆம் தேதியிலிருந்து 10-ஆம் தேதி வரை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆற்றிய உரைகளிலிருந்து தொகுக்கப்பட்டவை.

'தால்சார்' பகுதியிலிருந்து கொண்டு வரப்பட வேண்டும். அந்நியச் செலாவணி ரூ.307.58 கோடியுடன், ரூ.593.9 கோடி செலவில் எண்ணூரில் துணைத் துறைமுகம் ஒன்றைக் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. (4.11.94)

**- மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்**
**திரு எஸ். கண்ணப்பன்**

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

தமிழ்நாட்டில் தனியார் முதலீட்டில் 4000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தித் திறன் கொண்ட எட்டு அனல் மின் நிலையங்கள் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் 1994-ஆம் ஆண்டு செப்டம்பர் வரையில், மின் உற்பத்தித் திறன் 228.02 மெகாவாட் அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. 13.57 இலட்சம் மின் இணைப்புகள் புதிதாக வழங்கப்பட்டன.

இத் திட்டத்தின் முதல் நிலையில், செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் உள்ள எண்ணூர் கிராமத்தில் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் மின் திறனுள்ள மூன்று பிரிவுகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

வட சென்னை அனல் மின் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலக்கரி ஒரிசா மாநிலத்திலுள்ள

காய்கறிகளைப் பாதுகாக்க, நடப்பாண்டில் மூன்று இடத்தில் குளிர்சாதனக் கூடம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு மூன்று கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம், கிருஷ்ணகிரி, திருச்சி ஆகிய இடங்களில் முதல்கட்டமாக மூன்று குளிர்சாதனக் கூடம் அமைக்கப் படுகிறது. (4.11.94)

**- மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**
**திரு கு.ப. கிருஷ்னன்**

தமிழ்நாட்டில் கடந்த 91-ஆம் ஆண்டு முதல் நீதிபதி நேரடி நியமனத்தில் 30 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 758 நீதிபதிகள் உள்ளனர். இதில் 81 பேர் பெண்கள். சுதந்திரம் பெற்ற 45 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் 49 பெண் நீதிபதிகள்தான் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில்

32 பெண் நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (4.11.94)

**-மாண்புமிகு சட்ட அமைச்சர்**
**திரு கே.ஏ. கிருஷ்ணசாமி**

மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர், பேரவைத்தலைவர் ஆகியோரின் சம்பளம் ரூ.3,500-லிருந்து ரூ.4,500 ஆக உயர்த்தப்படும். பேரவைத் துணைத்தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், தலைமைக் கொறடா ஆகியோருக்குச் சம்பளம் ரூ.3,200-லிருந்து ரூ.4,000 ஆக உயர்த்தப்படும். சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம் ரூ.1,250-லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தப்படும். (4.11.94)

**மாண்புமிகு நிதியமைச்சர்**
**நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**

அண்மையில் தமிழகத்தில் புயல் பெருமழையால் 54 பேர் உயிர் இழந்துள்ளனர். இதில் 53 பேர்களின் குடும்பத்துக்கு முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 32 ஆயிரத்து 692 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவைகளுக்கு ஒரு கோடியே 8 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூ.61.22 கோடி ரூபாய்க்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று மத்திய அரசுக்கு விளக்கமாக இரண்டு அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. (7.11.94)

**- மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்**
**திரு எஸ்.டி. சோமசுந்தரம்**

நமது முதல் அமைச்சர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் 30 சதவிகித மின்சார வெட்டு இருந்தது. ஆனால், அவர் நிறைவேற்றியுள்ள பல்வேறு திட்டங்களால் 30 சதவிகித மின்சார உற்பத்தி உயர்ந்து இருக்கிறது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியில் 5,500 கலோரியிலிருந்து 6 ஆயிரம் கலோரி வரை இருப்பதால் பல கோடி ரூபாய் மிச்சமாகிறது.

புரட்சித்தலைவியின் சிந்தையில் உதித்த மற்றொரு திட்டத்தின் விளைவாகப் புவனேசுவரம் பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் அமைக்க இடம் கேட்டிருக்கிறோம். அதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி அளித்தால் கூட்டு முயற்சியில் நாமே நிலக்கரியைத் தோண்டி எடுத்துச் சுத்தப்படுத்திக் கொண்டு வரலாம். (7.11.94)

**-மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்**
**திரு எஸ். கண்ணப்பன்**

இட ஒதுக்கீடு பிரச்சினையில் 69 சதவிகிதத்தைத் தமிழக அரசு விட்டுக் கொடுக்கவில்லை. (7.11.94)

**- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**
**திரு எஸ். முத்துசாமி**

தமிழ்நாட்டில் பள்ளி மாணவர்களிடம் சிக்கனப் பண்பையும், சேமிப்புப் பழக்கத்தையும் ஊக்குவிக்கும் நோக்குடன் ‘சஞ்சாயிகா’ சேமிப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 1993-94-ஆம் ஆண்டில் ஒரு கோடியே 23 இலட்சம் ரூபாய் சேமிப்பு மூலம் திரட்டப்பட்டது. (7.11.94)

**- மாண்புமிகு நிதியமைச்சர்**
**நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**

எய்ட்ஸ் நோய் குறித்து இரத்த வங்கிகளில் சோதனை செய்யப்படுகிறது. இந்தச் சோதனை முறை பற்றி மாவட்ட வாரியாக டாக்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. எய்ட்ஸ் கொடுமையான நோய். இதற்கு பிரச்சாரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். மக்கள் ஒத்துழைப்பு கொடுத்தால்தான் நோயை ஒழிக்க முடியும். (7.11.94)

**- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**
**திரு எஸ். முத்துசாமி**

மதுரை, கரூர், பொள்ளாச்சி, தஞ்சாவூர் போன்ற நகரங்களில் மின் விநியோகப் பொறுப்பை மின் வாரியமே நேரடியாக ஏற்றுக் கொள்ள இருக்கிறது. சென்னை நகர மின் விநியோகத்தைச் சீர்படுத்த மயிலாப்பூரில் 52 கோடி ரூபாய் செலவில் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. மதுரை, கோவை, திருச்சி நகர மின் விநியோகத்தைச் சீரமைக்க 80 கோடி ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. (7.11.94)

**- மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்**
**திரு எஸ். கண்ணப்பன்**

தமிழ்நாட்டில், 15 ஆண்டுகளுக்குக் கருங்காலி மரங்களை வெட்டத் தடை விதிக்கப் படுகிறது. அவற்றை வைத்திருத்தல், ஏற்றிச் செல்லுதல், மற்றும் விற்பனை செய்தல் ஆகிய செயல்களைப் பதினைந்து ஆண்டுக்கால அளவிற்குத் தடை செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (8.11.94)

**- மாண்புமிகு வனத்துறை அமைச்சர்**
**திரு கு. லாரன்ஸ்**

ரூபாய் 60 கோடி செலவில் வீராணம் ஏரியைச் சீரமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. இத்திட்டத்தால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாது. (8.11.94)

**- மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்**
**திரு எஸ். கண்ணப்பன்**

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சார்பில் புதிதாக 200 சொகுசுப் பேருந்துகள் விடப்படும். மேலும் சாலையோர உணவு விடுதிகள் உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (8.11.94)

**- மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்**
**திரு கே.ஏ. செங்கோட்டையன்**

தமிழக அரசு அனைத்து ஊராட்சிகளின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 1995-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வரை நீடிக்கவும், அதற்கிணங்க 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தைத் திருத்தி அமைப்பதெனவும் முடிவு செய்துள்ளது. (8.11.94)

**- மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு டி.எம். செல்வகணபதி**

1995-96-ஆம் ஆண்டில் வேளாண் பாடத் திட்டங்கள் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்படும். (8.11.94)

**- மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**
**திரு கு.ப. கிருஷ்ணன்**

அடுக்குமாடிக் குடியிருப்புகளின் உரிமை யாளர்கள் அக்குடியிருப்புகளைப் பயனுள்ள முறையில் அடமானம் வைக்கவும், உரிமை மாற்றம் செய்யவும் வகை செய்யும் புதிய சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகப்படுத்த



☆ இலக்கியம் என்பது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும்.

அரசு முடிவு செய்துள்ளது. (8.11.94)

**- மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்**
**திரு எஸ். ரகுபதி**

நிலமனைப் பட்டா உள்ள நரிக்குறவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக இந்த ஆண்டு ரூ.3.5 கோடி செலவில் 1,533 பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். (8.11.94)

**- மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்**
**திரு டி. ஜெயக்குமார்**

தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் வகையில் பிற மொழிகளில் இருந்து மாற்றம் செய்யப்பட்ட தமிழ்ப் படங்களுக்குத் தற்போது உள்ள வரி விதிப்பில் 10 புள்ளிகள் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. இந்த முறை கடந்த 1.9.94 முதல் அமலுக்கு வந்துள்ளது. தமிழ்த் திரைப்பட அதிபர்களை ஊக்குவிக்கவும், பாதுகாக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (9.11.94)

**- மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்**
**திரு வி. சத்தியமூர்த்தி**

தஞ்சாவூரில் உலகத் தமிழ் மாநாட்டை, பிரம்மாண்டமாகப் பெரிய அளவில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. பொது அரங்கத்தில் கலை, கண்காட்சி நிகழ்ச்சிகள் நடைபெறும். இதில் 25 இலட்சம் மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. தஞ்சை நகரில் நூலகம், மாநாட்டுக் கூடம், நினைவுக் கோபுரம், ராஜராஜசோழன் சிலை, திருவள்ளுவர் சிலை, ஏழு தோரணவாயில்கள் ஆகியவை அமைக்கப்படுகின்றன. மாநாட்டுக்கு 54 கோடியே

56 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 33 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. (9.11.94)

**- மாண்புமிகு நிதியமைச்சர்**
**நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**

ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் கீழ், தகுதியுள்ளவர்கள் சம்பந்தப்பட்ட அரசு அலுவலருக்கு உரிய கால அவகாசத்துடன் மனுச் செய்தால் திருமண நாளன்றே உதவித் தொகையைப் பரிசாக வழங்க அரசு ஆவன செய்யும். 1994-95-ஆம் ஆண்டிற்கு 1,050 பெண்களுக்கு 21 இலட்சம் ரூபாய் உதவித்தொகையாக வழங்க சமூகநலத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (10.11.94)

**- மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்**
**புலவர் திருமதி இந்திரகுமாரி**

திருச்சி மாவட்டத்தில், மூளைக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவும், தனியாக நிதி ஒதுக்கி உரிய பணி மேற்கொள்ளவும் மாண்புமிகு முதல்வர் உத்தரவிட்டார். சென்னை மாநகராட்சியில் இருந்து பெரிய அளவில் மருந்து தெளிப்பதற்காக இயந்திரம் எடுத்துச் செல்லப்பட்டது. இதன் காரணமாக இந்நோயினால் ஏற்படும் இறப்பு குறைந்துள்ளது. (10.11.94)

**- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**
**திரு எஸ். முத்துசாமி**

திருச்சியிலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ள விராலிமலையில் சுப்பிரமணியசாமி கோயில் சுற்றியுள்ள இடங்களில் மயில்கள் அதிக அளவில் உள்ளன. இம் மயில்களைப் பாதுகாக்க 25 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (10.11.94)

**- மாண்புமிகு வனத்துறை அமைச்சர்**
**திரு கு. லாரன்ஸ்**

தமிழ்நாட்டில் எட்டு மத்திய சிறைச்சாலையும், 200-க்கும் மேற்பட்ட கிளைச் சிறைச்சாலைகளும் உள்ளன. இவற்றில் 3 ஆயிரத்து 276 பேர் பணிபுரிகின்றனர். இவர்களில் 793 பேருக்கு வீட்டுவசதி செய்து தரப்பட்டு உள்ளது. மற்றவர்களுக்கு வீடு இல்லை. இவர்களுக்கு வீடு கட்ட உதவ வேண்டும் என்று 10-வது நிதிக் கமிஷனைக் கேட்டு உள்ளோம். இதற்கிடையே தமிழ்நாடு காவல் துறை வீட்டுவசதிக் கழகம் சார்பில் இவர்களுக்கு வீடு கட்டித்தர அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. (10.11.94)

**- மாண்புமிகு சட்ட அமைச்சர்**
**திரு கே.ஏ. கிருஷ்ணசாமி**

உச்சநீதி மன்றத்தின் ஆணை காரணமாக 13,088 ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் தேர்வு எழுத முடியவில்லை. இவர்கள் தேர்வு எழுத அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. (10.11.94)

**- மாண்புமிகு கல்வி அமைச்சர்**
**திரு கே. பொன்னுசாமி**

## தமிழ்ப் பண்பாடு



"தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும். ஆனால், தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக்காலும் இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்.

–பேரறிஞர் அண்ணா

# கூட்டுறவே நாட்டுயர்வு!

**அ**கில இந்தியக் கூட்டுறவு வார விழாவையொட்டி, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், ஒரு நாள் (12.11.94) பத்திரிகையாளர் பயணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது.

சென்னையில் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் சிலவற்றைப் பார்வையிடுகிறோம்.

**டான்பெட்**

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்பெட்,) விவசாயிகளுக்கு நியாயமான விலையில் இரசாயன உரங்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்யும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

பூச்சி மருந்துகள் விற்பனை கடந்த ஆண்டைவிட அதிக முன்னேற்றம் கண்டுள்ளது. 1992-93-இல், ரூ.16 இலட்சத்திற்கு விதைகளும், ரூ.500 இலட்சத்திற்கு பூச்சி மருந்துகளும், ரூ.10 இலட்சத்திற்கு விவசாயக் கருவிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

1993-94-இல் ரூ.45 இலட்சத்திற்கு விதைகளும், ரூ.589 இலட்சத்திற்கு பூச்சி மருந்துகளும், ரூ.2 இலட்சத்திற்கு விவசாயக் கருவிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**மாம்பலம் காசிவிசுவநாதர் கூட்டுறவு கட்டடச் சங்கம்**

இந்தச் சங்கம் 1927-இல் தொடங்கப்பட்டது. இச்சங்கம் இவ்வாண்டு ரூ.4.61 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இது, இதுவரை 2,500 வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது. சென்னை, பள்ளிக்கரணையில் ஐந்து ஏக்கரில் 104 வீட்டுமனைகளை இச்சங்கம் விற்பனை செய்து வருகிறது. ஒரு கிரவுண்ட் விலை ரூ.80 ஆயிரம் ஆகும். அத்துடன் அங்கு வீடு கட்ட ரூ.2 இலட்சம் கடனுதவியையும் இது வழங்குகிறது.

**காமதேனு சிறப்பங்காடி**

சென்னை அகரம் பெரியார் நகரில் காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடியின், புதிய சுயசேவைப் பிரிவு திறப்பதற்காக 15 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு உள்ளது. ஓராண்டுக்குள் இந்த அங்காடி கட்டி முடிக்கப்படும்.

1993-94-இல் ரூ.5,064 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1994-95 அக்டோபர் முடிய ரூ.3,243 இலட்சம் விற்பனை ஆகியுள்ளது.

**டி.என்.எஸ்.சி. வங்கி**

கடந்த 88 ஆண்டுகளாக இந்த வங்கி இயங்கி வருகின்றது. இது வேளாண்மைக் கடன் வசதி செய்து, பசுமைப் புரட்சிக்குத் துணை புரிகின்றது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பூாலைகள் ஆகியவற்றின் நடைமுறை மூலதனத்திற்கு மறு நிதி உதவி செய்து அதன் வளர்ச்சிக்கு உதவி புரிகின்றது. தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்துக்கும் மறு நிதி உதவி புரிந்து வருகின்றது.

**எம்.சி.சி. வங்கி**

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி, கடந்த 64 ஆண்டுகளாகச் சிறு தொழில்கள் தொடங்கவும், நடைபாதை வியாபாரிகள், பூ, காய்கறி வியாபாரிகள், மருத்துவர்கள், ஏழை எளியவர்கள் சுய தொழில்கள் செய்யவும் கடன் வசதி அளித்து வருகிறது. சென்னையில் மட்டும் இந்த வங்கிக்கு 52 கிளைகள் உள்ளன.

**தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்**

நடப்பு நிதியாண்டில் (1994-95) நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பத்தாயிரம் வீடுகளும் கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், 54,500 வீடுகளும் ஆக மொத்தம் 64,500 வீடுகள் கட்டி முடிக்கவும், 30 ஆயிரம் வீடுகள் மேம்படுத்தவும் ரூ.200 கோடி அளவுக்குக் கடன் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறைந்த செலவில், வீடுகளைக் கட்டியதற்காக, இந்த இணையத்திற்குத் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**கோ ஆப்டெக்ஸ்**

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், 1993-94-இல் ரூ.225 கோடிக்குக் கைத்தறித் துணிகளையும், ரூ.50 கோடிக்கு நூல்களையும் விற்பனை செய்துள்ளது. இதில் பட்டு மட்டும் ரூ.50 கோடி என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் இது, ரூ.2 கோடிக்கு ஏற்றுமதியும் செய்து வருகிறது.

இவ்வாறு 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதனை மெய்ப்பிக்கும் வகையில் இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, இந்திய நாட்டிற்கான அமெரிக்கத் தூதர் திரு பிராங். ஜி. வைசனர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து, அமெரிக்காவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். (8.11.94)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில், தெலுங்கு திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் நடிகர்கள் சந்தித்தார்கள் . (10.11.94)





ஜப்பான் நாட்டிலுள்ள ஹிரோஷிமாவில் நடைபெற்ற கபடிப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தை வென்ற இந்தியக் கபடி அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு எஸ்.ராஜரத்தினம் குழுவின் கேப்டன், திரு பி.கணேசன், திரு கே.பாஸ்கரன் ஆகிய மூன்று விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலகத்தில் வழங்கினார். (9.11.94)



பண்டித ஜவகர்லால் நேருவின் 106-வது பிறந்த நாளையொட்டி, சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் உள்ள நேரு சிலைக்கு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். (14.11.1994)

# "நாவலர் அவர்களின் தமிழ்த்தொண்டு இன்றுபோல் என்றும் தொடர வேண்டும்!"

## "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு" - நூலை வெளியிட்டு மாண்புமிகு முதலமைச்சர் புகழாரம்

ஆட்டை சொல்லும் செய்தி

*"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று, சங்கே முழங்கு!"*

—என்று, அமிழ்தினும் இனிய அருந்தமிழ் மொழியைத் தனது ஊனிலும், உயிரிலும், உணர்விலும், உள்ளத்திலும் இரண்டறக் கலந்து, தனது வாழ்நாள் முழுவதும் நீங்கா இடம் பெற்றவர், புதுமைக் கவிஞர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ஆவார்! இருபதாம் நூற்றாண்டு நமக்களித்த, அந்தப் புரட்சிக் கவிஞரின் வாழ்க்கை வரலாற்றினை, பைந் தமிழில், பழகு நடையில், பாங்கோடு படைத் திட்ட, டாக்டர் நாவலர் அவர்களின் நயத்தகு நூலை வெளியிட்டு, அரங்கு நிறைய அமர்ந்திருக்கும், ஆன்றோர்கள் அனைவரை யும் சந்திப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம் அனைவரின் போற்றுதலுக்கும் உரிய வராய் விளங்குகின்ற, நடமாடும் பல்கலைக் கழகமாம், டாக்டர் நாவலர் அவர்கள், பொது வாழ்க்கைப் பணியிலும், தமிழ் இலக்கியப் பணியை, மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது, ஆற்றி வருகின்ற பாங்கு, பாராட்டத் தக்கதாகும். டாக்டர் நாவலரின் நாவன்மை, உலகறிந்த ஒன்று. அவரது பேனாவின் திறமை யையும், எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. பல்கலைத் திறனைத் தன்னகத்தே கொண்ட வர், டாக்டர் நாவலர் அவர்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, டாக்டர் நாவலர் அவர்கள், இயற்றிய, 'திருக்குறள் தெளிவுரை' என்ற நூலை வெளியிட்டு, நான் உரையாற்றிய நிகழ்ச்சி, இன்றும் எனது நினைவில், பசுமையாக இருக்கின்றது. அவரது மற்றொரு முக்கியமான புத்தகத்தையும், இன்று நான் வெளியிடுவதை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழின் மேன்மைக்கும், தமிழ் இலக்கியத் தின் வளர்ச்சிக்கும், தன்னை அர்ப்பணித்துக் கொண்ட, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வாழ்க்கை வரலாற்றை, இனிய தமிழில் வடித்து, தமிழ் இலக்கிய உலகிற்குப் பெருமை சேர்த்துள்ள டாக்டர் நாவலர் அவர்களுக்கு, உங்கள் அனைவரின் சார்பிலும், எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவருடைய அளப்பரிய தமிழ்ப் பற்றின் விளைவாலும், ஆழ்ந்த இலக்கியச் செறிவின் எழுச்சியாலும், பாவேந்தர்பால் கொண்டி ருந்த கெழுதகை நட்பினாலும், நீங்கா அன் பின் நினைவுப் பரிசாகப் படைக்கப்பட் டுள்ள, இந்த அருமையான நூலினை, நான் வெளியிட வேண்டும் என்று, டாக்டர் நாவலர் எனக்கு வேண்டுகோள் விடுத்த போது, நான் மகிழ்ச்சியோடு, அவரது அழைப்பை ஏற்றுக் கொண்டேன். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.




ஒன்று, நாவலருடைய நூலை வெளியிடுவதன் மூலம், தமிழன்னைக்குத் தொண்டாற்றிய மாபெரும் கவிஞருக்கு, அஞ்சலி செலுத்த அருமையான வாய்ப்புக் கிடைக்கும்.

இரண்டாவது, பாவேந்தர் பாரதிதாசனுடைய, புரட்சிகரமான சமுதாய முன்னேற்றக் கருத்துக்களை, மீண்டும் ஒரு முறை, இந்தச் சமுதாயத்திற்கு நினைவு படுத்துகிற நல் வாய்ப்புக் கிடைக்கும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய, வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு, டாக்டர் நாவலரைவிடத் தகுதி படைத்தவர், வேறு எவரும் இருக்கமுடியாது என்பதை, என்னால் உறுதியாகக் கூற முடியும். பாரதிதாசனின் கருத்தாழமிக்க கவிதைகளை, மேடைதோறும் முழங்கியதோடு, அவரது கவிதை வரிகளுக்குத் தனது விளக்கங்களின் மூலம், ஒரு அமரத்துவத்தைப் பெற்றுத் தந்தவர், டாக்டர் நாவலர் என்றால், அது மிகையாகாது. அவர்கள் இருவரிடையே இருந்த நட்பின் ஆழம், எத்தன்மை வாய்ந்தது என்பதையும், இந்த வாழ்க்கை வரலாறு எழுதப்பட வேண்டிய அவசியம் குறித்தும், டாக்டர் நாவலர் அவர்களே, இந்தப் புத்தகத்தின் முகவுரையில், சில இடங்களில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அழகுமிளிர் கவிதைகளில், தமிழன்னையை ஆராதித்த, புரட்சிக் கவிஞரின் வாழ்க்கையைப் பற்றி, எதிர்காலத் தலைமுறையினரும், அறிந்துகொள்ள வேண்டும், போற்றிப் பாராட்ட வேண்டும், என்ற எண்ணத்தின் அடிப்படையில், இந்த நூலைத் தான் படைத்ததாக, நாவலர் அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். தனது புரட்சிக் கவிதைகள் மூலமாகச் சொல்லிலும், பொருளிலும், கவிதை அமைப்பிலும், கருத்து விளக்கத்திலும், தனது கொள்கை, குறிக்கோள், கோட்பாடு, ஆகிய ஒவ்வொன்றிலும், பாவேந்தர் புதுமையை எங்ஙனம் நிலை நாட்டினார் என்பதைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும், தவறாமல் உணரவேண்டும். என்பதற்காகவும், இந்த நூல் இயற்றப்பட்டது என்று, இன்னொரு விளக்கத்தையும், டாக்டர் நாவலர் அவர்கள், மற்றுமொரு இடத்தில் தந்துள்ளார்.

சமுதாயத்தில் நிலவுகின்ற பழமை வாதத்தை, கண்மூடித்தனமான நம்பிக்கைகளை, குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களை, சாதித்துவேஷங்களை, முழு மூச்சோடு எதிர்த்தவர் பாவேந்தர் பாரதிதாசன் என்பதை, உலகிற்கு உணர்த்திடவும் "கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்த்துப், புதியதோர் உலகத்தை" உருவாக்க முயன்றவர், புரட்சிக் கவிஞர் என்பதை, 'தமிழ் கூறு நல்லுலகத்தை' என்றென்றும் உணர வைக்க வேண்டும் என்பது, தனது அவா என்றும், டாக்டர் நாவலர் அவர்கள் தனது நோக்கத்தை விளக்கிக் கூறி இருக்கிறார்.

சில நேரங்களில், கவிதை ஆக்கியோனை விட, உரையாசிரியர்கள், அந்தக் கவிதைகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளித்து, சிறப்புச் சேர்த்து விடுவார்கள், இன்று நாவலரும், அதே உணர்வினால் உந்தப்பட்டு, பாரதிதாசனின் சிந்தனையில் உதித்த மலர்

களுக்கு, ஒரு புதிய மணத்தையும், ஒரு புதிய நிறத்தையும் அளிக்கப் பாங்குற எடுத்துள்ள முயற்சி, உண்மையில் வியந்து பாராட்டத்தக்க அம்சம் ஆகும்.

நாவலர் அவர்கள் பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியாரால் புகழப்பட்டவர்; பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் போற்றப்பட்டவர்; இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் மதிக்கப்பட்டவர்.

நமது இதய தெய்வம் புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர், நாவலரைப்பற்றிக் கூறுகையில், "எதையும் ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலாளர்; சொல்லாற்றல் மிக்கவர்" என்று, மனதாரப் புகழ்ந்தார்கள்.

நீடுதுயில் நீக்கப், பாடி வந்த நிலவாகத் தோன்றிய, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் எழுச்சிமிகு வாழ்க்கையை, நாற்பது அத்தியாயங்களில், இலக்கிய நயத்துடன், கவிஞரின் மனங்கவர் கவிதை மேற்கோள்களுடன், சுவைபட, நீண்டதோர் காவியமாகப் புனைந்துள்ளார், நாவலர் அவர்கள்.

"மலர்களின் அழகு மிளிர் வண்ணங்களை வெளிப்படுத்த, கதிரவனின் கதிர்கள் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவிற்குக் கவிதைகளின் பொலிவை வெளிப்படுத்த, கவிஞரின் கற்பனைத் திறன் முக்கியம்" என்று நாவலர் குறிப்பிட்டுள்ளார். எழுத்தாளராக ஆரம்பித்த டாக்டர் நாவலர் அவர்கள், சில இடங்களில், ஒரு கவிஞராக மாறியுள்ளார். பாரதிதாசன் படைப்புகளால் ஏற்பட்ட தாக்கமா? அல்லது பாரதிதாசனின் அளப்பரிய நட்பினால் ஏற்பட்ட மாற்றமா? புரியவில்லை.

கனக சுப்புரத்தினம் என்ற துடிப்புள்ள இளைஞர், சுப்பிரமணிய பாரதியாரால் ஈர்க்கப்பட்டு, பின்னர் புரட்சிக் கவிஞராக மாறினார் என்பதையும் இளமைப் பருவத்திலேயே, அவர் பாரதியார் மேல் கொண்டிருந்த தீவிர பக்தியையும், அபாரப் பற்றையும், தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

பாரதியாரின் புதுமைக் கருத்துக்களும், விடுதலை வேட்கைக் கருத்துக்களும், பாரதிதாசனின் எண்ணங்களையும் உணர்வுகளையும் ஆக்கிரமித்ததையும் கனக சுப்புரத்தினம், பாரதிதாசனாக மாறியதையும் பின்னர் தந்தை பெரியாரின், சுயமரியாதைக் கருத்துக்களின் பால் ஈர்க்கப்பட்டு, சமுதாயத்தையே மாற்றியமைக்கக் கூடிய வகையில், புரட்சிக் கவிதைகளைப் பாடி, புரட்சிக் கவிஞராக மாறியதையும் தெளிவாகக் கூறியுள்ளார் நாவலர் அவர்கள்.



புதியதோர் உலகினைப் படைக்க, தமிழ்ச் சமுதாயத்தினருக்கு அறைகூவல் விடுக்க, பாவேந்தர் கையாண்ட முறையே, தனி அழகு. "பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியே வா!" என்று, பாவேந்தரின் புரட்சிக் கனல் வெடிக்கும் கவிதையை, நாவலர் அவர்கள், முதன் முதலாக, **1945**-ஆம் ஆண்டு கோவை சூலூரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், எழுச்சியும் உணர்ச்சியும் மிகுந்த குரலில், முழங்கியதைக் கண்டு பாவேந்தர் அவர்களே மகிழ்ந்து, நாவலர் அவர்களை மெச்சினார் என்ற அரிய செய்தியை, இந்த நூலில் காணும் போது நம் மனம் மகிழ்ச்சி அடைகிறது. அதுமுதற்கொண்டு, நாவலர், தான் உரையாற்றும் கூட்டங்களில் எல்லாம், பாரதிதாசனின் கவிதைகளை, தமிழ் நெஞ்சங்கள் கொள்ளை கொள்ளும் வண்ணம் பாடிப்பாடி, இன்று தமிழ் நாட்டில், பாவேந்தரின் பாடல்களை, பாமரரும் அறியும் வண்ணம், மேற்கொண்ட அரிய தமிழ்த்தொண்டு, போற்றுதற்கு உரியதாகும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தமிழ் வெறும் மொழி மட்டும் அன்று, அது நமது உடம்பில் ஒன்றியிருக்கும், உயிர் போன்றது என்று, அதனை உயர்த்திப் போற்றினார்.

பாவேந்தர் இயற்றிய, 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற புகழ் பெற்ற பாடல் மூலம், தமிழ் மொழி பற்றிப் பாரதிதாசன் கொண்டிருந்த உணர்வுகளை, நாம் தெளிவாக அறிய முடிகின்றது. இந்தத் தமிழ் மொழியானது, அமுதினைப் போன்றது, என்று கூறி, நாவலர் அவர்கள், பாவேந்தரின் தமிழ் உணர்வுகளை, வெகு சிறப்பாக விளக்கிக் கூறியுள்ளார்.

தமிழ் தழைக்க, பாவேந்தர் கண்ட கனவு, நனவாகும் வகையில், நமது பைந்தமிழ் மொழியின் மாட்சியை, உலகெலாம் உண ரும் வண்ணம், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினைத் தஞ்சைத் தரணியில், வரு கின்ற ஜனவரித் திங்களில், உலகெலாம் உள்ள தமிழ் நெஞ்சங்கள், மகிழும் வண்ணம் நடத்திட, உரிய ஏற்பாடுகளை, எங்களது அரசு, எழுச்சியோடு செய்துவருவதை, இந்த இனிய நேரத்தில் சுட்டிக் காட்டுவதில், பெருமிதம் கொள்கிறேன்.

ஆன்றோரின் கனவுகளையும், சான்றோர் களின் உணர்வுகளையும், நனவாக்குகின்ற பணியில், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, எழுச்சியோடு செய்துவருவதை, இந்த இனிய நேரத்தில் சுட்டிக் காட்டுவதில், பெருமிதம் கொள்கிறேன்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின், சமுதாய முன்னேற்றக் கருத்துக்களை, கனவு களை, நனவாக்கும் வகையில், எங்களது அரசு, தொய்வின்றிப் பாடுபட்டு வருகிறது என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள, நான் விரும்புகிறேன்.



பேராசிரியர் பாலசுப்ரமணியம் அவர்கள், சற்று முன்பு இங்கே உரையாற்றும்போது, பாரதியார் பெயரில், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளை நிறுவப்பட்டதுபோல், பாவேந்தர் பாரதி தாசன் பெயரிலும், அவரது பெயரையும், புகழையும் பரப்ப, அறக்கட்டளைகள் நிறுவ வேண்டும் என்ற கோரிக்கையை என்முன் வைத்தார்கள்.

*1991*-ஆம் ஆண்டு, நமது ஆட்சி உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி, தமிழகத்தில் மலருவதற்கு முன்பு, இந்தக் கோரிக்கை, பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவை ஒட்டி விடப்பட்ட தென்றும், அன்று அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை என்பதையும், சுட்டிக் காட்டினார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில், பாவேந்தர் பாரதி தாசன் அவர்கள் பெயரில், ஒரு இலட்சம் ரூபாயில், அறக்கட்டளைகள் நிறுவப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஒரு இலட்சம் ரூபாயில் தொடங்கப்படும் இந்த அறக்கட்டளைகள், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் புகழையும், இலக்கியச் சிறப்பை யும், உலகெலாம் பரப்பும் என்று உறுதியாக நம்புகிறேன்.

பாவேந்தர் பாரதிதர்சன் அவர்களைப் பற்றி, டாக்டர் நாவலர் அவர்கள் படைத் துள்ள, இந்த வாழ்க்கை வரலாற்று நூல், தமிழ் மொழியிலும், தமிழ்க் கவிதைகளிலும், பொதுவாகத் தமிழ் இலக்கியத்திலும், ஆர்வம் படைத்த அனைவருக்கும், நல் விருந்து படைக்கும் கருத்துப் பெட்டகமாய், என்றென் றும் விளங்கும் என்ற எனது நம்பிக்கையை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் நாவலர் அவர்களின், தமிழ் மொழித் தொண்டு, இன்று போல் என்றும் தொடர வேண்டும் என்ற, எனது நெஞ்சத்து அவாவினையும், இதயம் கனிந்த நல்வாழ்த்துக் களையும், டாக்டர் நாவலர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- *11.11.1994* அன்று சென்னையில் நடை பெற்ற டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் இயற்றிய 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' (வாழ்க்கை வரலாறு) நூல் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.**

# மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலரின் "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு" நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சிகள்

**மா**ண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் எழுதிய "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு" எனும் நூல் வெளியீட்டு விழா, சென்னை கலைவாணர் அரங்கில் **11.11.1994** அன்று சிறப்பாக நடைபெற்றது.

"டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை"யின் தலைவர் திரு. சை.வே. சிட்டிபாபு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இந்த இனிய விழாவிற்கு, மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமைத் தாங்கினார்.

"டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை"யின் சார்பில் வெளியிடப் பட்டுள்ள இந்த நூலின் முதல் பிரதியை, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நூலை வெளியிட்ட பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்த விழாவில், நூலாசிரியர் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பேசுகையில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்அவர்கள் தமிழுக்கும், நாட்டின் விடுதலைக்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் ஆற்றிய அரிய தொண்டைப் பலபடப் பாராட்டினார். செந்தமிழைத் திறம்படக் கையாண்டு, இதுவரை வேறு எந்தக் கவிஞனின் சிந்தனையிலும் உதிக்காத புதிய தொரு கண்ணோட்டத்தில், தென்றலைப் பாராட்டி புரட்சிக் கவிஞர் புனைந்த கவிதை வியப்புக்குரியது என்பதை மிகவும் போற்றிப் புகழ்ந்த டாக்டர் நாவலர் அவர்கள்,

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!...'

என்ற புரட்சிக் கவிஞரின் எழுச்சிமிகு கவிதையைக் கூறி தன் உரையை முடித்தார்.

விழாவில் கலந்துகொண்ட சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் நூலின் அருமை பெருமைகளை நயம்பட எடுத்துக்கூறினார். செந்தமிழில் நாவலருக்குள்ள புலமையை உளமார வியந்து பாராட்டினார்.

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் அவர்களும், வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு" நூலை வெகுவாகப் பாராட்டிப் பேசினர்.

இறுதியில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் நன்றியுரை நவில விழா இனிதே நிறைவேறியது.

# பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு மாண்புமிகு முதல்வர் அஞ்சலி!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், **30. 10. 94** அன்று காலை தனி விமானம் மூலம் சென்னை யிலிருந்து புறப்பட்டு மதுரை வந்து அடைந்தார். பின்னர், மதுரையிலிருந்து ஹெலிகாப்டர் விமானம் மூல்ம், இராமநாதபுரம் மாவட்டத் திலுள்ள, பசும்பொன் கிராமத்திற்குச் சென் றார். அங்கே, ஹெலிகாப்டர் விமானதளத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கட்சிப் பிரமுகர்களும், பொதுமக்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வர வேற்றார்கள்.

அங்கிருந்து, நேராகப் பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் திருமகனார் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று, புதுப்பிக்கப்பட்டுள்ள அவருடைய சமாதிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். புதுப்பிக்கப்பட்டுள்ள சமாதியின் பகுதிகளைச் சுற்றிப் பார்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பின்னர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் வாழ்ந்து மறைந்த இல்லத்திற்குச் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு முன்னால் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அந்த இல்லத்தில் இருப்பவர்களிடமும், சமாதியைப் பராமரித்து வருபவர்களிடமும்,

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவாலயத்தில் தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அஞ்சலி செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்.**





**மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவகம் சென்று அவர் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாடினார்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய தியான அறைக்குச் சென்று பார்வையிட்டு, தனது அஞ்சலியைச் செலுத்தினார்.

பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியில் குழுமியிருந்த பொது மக்களைப் பார்த்துக் கையசைத்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்ட பின்பு, ஹெலிகாப்டர் விமானதளத்திற்கு, வந்தடைந்தார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மற்றவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வழியனுப்பி வைத்தார்கள்.



சத்தியமே என் கடவுள்; அகிம்சையே அதைக் காணும் வழி.

அன்பு என்பது ஒருபோதும் கேட்பதில்லை; எப்போதுமே கொடுக்கும்.

ஹெலிகாப்டர் விமானம் மூலம் புறப்பட்டு பிற்பகல் 1.00 மணி அளவில் மதுரை வந்து அடைந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன், மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தேவர் பேரவையைச் சேர்ந்தவர்கள், கட்சிப் பிரமுகர்கள், தேவர் அறக்கட்டளைக்குப் புதிதாக நியமனம் செய்யப்பட்ட தனி அலுவலர் திரு தியானேசுவரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இல. கிருட்டிணன், காவல் துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், கூடுதல் இயக்குநர், திரு வால்டர் தேவாரம் மற்றும் உயர் காவல்துறை அதிகாரிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தார்கள்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் அவர்களின் சமாதி கிட்டத்தட்ட 6 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு இருந்தது. உடைந்து போன தரை சீர் செய்யப்பட்டும், சமாதிக்குப் புதிதாகப் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டும், சுதை வேலைகள் சீர் செய்யப்பட்டும், புதிதாக வண்ணம் அடிக்கப் பட்டும், பூங்காக்கள் சுற்றி அமைக்கப்பட்டும், ஒரு திருக்கோயிலைப் போல்ச் சீர் செய்யப் பட்டிருந்தது.

# அரசு சார்பில் எடுக்கப்பட்ட தேவர் பிறந்தநாள் விழா



'**தெ**ன்னாட்டு நேதாஜி' என்ற புகழ்பெற்ற தியாகசீலர் முத்துராம லிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழா, அவர் பிறந்த 'பசும் பொன்' கிராமத்தில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

அவர் பிறந்த நாளான 30.10.94 அன்று காலை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அன்னாரது நினை வில்லத்திற்கு வருகை புரிந்தார். அவர் சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் தேவர் திருமகனார் வாழ்ந்த இல்லத்தையும் பார்வை யிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர் களோடு, மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்களும், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும் வந்திருந்தார்கள்.

## பசும்பொன் விழா

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் 30.10.94 அன்று மாலை இராமநாதபுரம் மாவட்டத் தலைநகரான இராம நாதபுரம் அரண்மனை முன் நடை பெற்றது. இந் நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் விழாத் தலைமை ஏற்றார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளு மன்ற - சட்டமன்ற உறுப்பினர் களும், பங்கேற்ற அக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இல. கிருட்டிணன் அவர்கள் வர வேற்புரையாற்றினார்.

## செய்தித்துறை இயக்குநர்

தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன் அவர்கள், விழா எடுக்கப்படுவது பற்றி விளக்கிப் பேசும்போது தெரிவித்த தாவது:

"செயற்கரிய செய்வர் பெரியார்' என்ற வகையிலே, தமிழ்ச் சமுதாயத்திற்கு மிகச் சிறந்த காரி யங்களைச் செய்தவர் ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள். அந்தப் பெரி யாராலேயே, 'பெரியார்' என்று பாராட்டப்பட்டவர்தான் பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள். சிறந்த ராஜதந்திரியான ராஜாஜி, இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில், "தென் புலத்திற்கு நான் பார்த்தன் என் றால், இந்தப் பார்த்தனுக்குச் சார தியாக இருந்து சுதந்திரப் போரை வெற்றி பெறும் விதத்தில் நடத் தியவர் தேவர்தான்" என்றார். சத்தியமூர்த்தி அவர்களும் 'காங் கிரஸ் காத்தான்' என்று மிகப் பொருத்தமான ஒரு பட்டத்தைத் தேவருக்குச் சூட்டினார். தேவர் நாவில் என் தமிழன்னையே அமர்ந்து பேசுகிறாள் என்று தமிழ்த்தென்றல் திரு.வி.க. சொல்லியிருக்கிறார். அத்தனைப் பெருமைக்குரிய தேவர் அவர்களை இப்பகுதி மக்கள் தெய்வமாகவே மதித்து வழிபடு கிறார்கள். அத்தகையவருக்கு தமிழ்நாடு அரசே எடுக்கும் முதலாவது விழா இது."

## திரு. அ.மா. பரமசிவன் அவர்கள்

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு அ.மா. பரம சிவன் அவர்கள், கட்டுரைப் போட்டியிலும், பேச்சுப் போட்டி யிலும் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்குப் பரிசுகள் வழங் கிப் பேசுகையில் குறிப்பிட்ட தாவது:

''புரட்சித்தலைவர் அவர்கள் தான் தமது ஆட்சிக் காலத்தில் தேவர் அவர்களின் பிறந்தநாளைத் தேசியத் தலைவர்களின் பிறந்த நாள் பட்டியலில் சேர்த்து, மதுரை முகவை மாவட்டத்தினராகிய நாமெல்லாம் கொண்டாடச் செய் தார். இவ்விழாவை மாநில அள வில் கொண்டாடச் செய்த பெருமை நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களையே சேரும். எந்த முதலமைச்சரும் செய்திராத நற்காரியம் ஆகும் இது. சென்னை யில், முக்கியமான இடத்தில் நம் தேவர் அவர்களின் சிலையைத் தம் திருக்கரத்தாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார். அந்தச் சிலை செய்யும் பணிக்கு ஒரு இலட்சத்து எட்டாயிரம் ரூபாய் கொடுத்த சிறப்பும் புரட்சித்தலைவி அவர் களையே சாரும்."

## திரு. மு. தென்னவன் அவர்கள்

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், தமது சிறப்புரையின் போது தெரிவித்ததாவது:

"இந்த மண்ணில் பிறந்தவரும், தியாகசீலராகத் திகழ்ந்தவரும், தனி மனித ஒழுக்கத்தில் எவரா லும் குறை சொல்ல முடியாத அள விற்கு அற்புத மனிதராக- மங்காப் புகழ்பெற்ற மாணிக்கத் தலைவ ராகத் திகழ்ந்தவர் பசும்பொன் தேவர் திருமகன் அவர்கள்.

ஆதிதிராவிடப் பெருமக்களையும் சகோதரப் பாசத்தோடு கொண்டாடிய அவர் பிறந்த நாள் விழாவை மாநில அளவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் முதன் முறையாக நடத்தப்பட வேண்டுமென நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், விடுத்த கட்டளையின் பெயரில், செய்தித்துறை சார்பிலே இந்த விழா இங்கே மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யாரெல்லாம் போற்றப்பட வேண்டுமோ, யாரெல்லாம் புகழப்பட வேண்டுமோ அவர்களையெல்லாம் தவறாமல் போற்றிவருகிற புகழ்ந்து பாராட்டுகிற அரசு நமது புரட்சித்தலைவி அவர்களின் அரசு என்பதற்கு இந்த விழா ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

முக்குலத்தோர் **18** ஆயிரம் பேர்களே இருந்த முதுகுளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட தேவர் அவர்கள் தேர்தலில் நின்றபோது பெற்ற வாக்குகள் இரண்டு இலட்சம் ஆகும்; சாதிமதப் பேதங்களைக் கடந்து பெருமை பெற்றிருந்தார் அவர்.

### திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள்

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள், நலிவுற்ற குடும்பத்தார் ஐம்பது பேருக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசுகையில் கூறியதாவது:

"பசும்பொன் தேவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த முதுகுளத்தூர் தொகுதிதான், என்னுடைய சட்டமன்றத் தொகுதியான கடலாடித் தொகுதி. ஆகவே, இந்த விழா இங்கே கொண்டாடப்பட முழுமுதல் காரணமான இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களுக்குத் தொகுதி மக்கள் சார்பில் குறிப்பாக, முக்குலத்துப் பெருமக்களின் சார்பில் நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். எது நியாயமோ, எது தர்மமோ அதைத் துணிவோடும் தாமதமின்றியும், இலாப நட்டக் கணக்குப் பார்க்காமல் செய்து முடிக்கக் கூடியவர் நம் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதற்கு இந்த இனிய விழாவே சான்றாகும். தேவரின் நினைவில்லத்தை அரசுடைமையாக்கி, புதுப்பித்துப் பெருமை பெற்றிருக்கிறார், நமது புரட்சித்தலைவி அவர்கள்.

காந்தியார் ஆலயப் பிரவேசம் பற்றி அறிவித்தபோது, மதுரையில் ஆதிதிராவிடர்களோடு கோயிலில் புகமுடியாத நிலை வைத்தியநாத ஐயருக்கு ஏற்பட்டது. 'நானிருக்க பயமேன்' என்று துணிவோடு அவர்களை அழைத்துக் கொண்டு கம்பீரமாகக் கோயிலுக்குள் புகுந்த வீரத் திருமகனே தேவர் அவர்கள்.

'எந்த ஒரு ஆதிதிராவிடரின் இரத்தம் மண்ணில் சிந்தினாலும், அது என் இரத்தத்திற்குச் சமம்' என்றவர் அவர்.

### திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள்

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தம் தலைமையுரையில் தெரிவித்ததாவது:

"பசும்பொன் சிங்கம், பத்தரை மாற்றுத் தங்கம் தேவர் முத்துராமலிங்கம் பிறந்த நாள் எழுச்சிமிகு நிகழ்ச்சி இது. ஒரு முப்பத்தியோராண்டுக் காலம், ஒரு தலைசிறந்த தலைவனை முறையாகப் போற்றப்படாதிருந்த ஒரு குறை, இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களாலே நீக்கப் பட்டிருக்கிறது. இதற்காகவே, அவர்களிருக்கும் திக்கு நோக்கி வணங்கி நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் இந்தப் பசும்பொன்னுக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல, தமிழ் நாட்டுக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல, உலகளாவிய அளவில் போற்றப்பட வேண்டியவர் என்பதைச் செய்துகாட்டியிருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களாவார்."

### திரு. எஸ்.டி.எஸ். அவர்கள்

தேவர் திருமகனின் படத்தைத் திறந்துவைத்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு:

"தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் சாதிமத பேதங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உணர்வுடையவர்கள். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களும் அப்படிப்பட்ட ஆசாபாசங்களையெல்லாம் கடந்து இந்த நாடு விடுதலையடைய வேண்டும் என்பதற்காகத்தான் பாடுபட்டார். அதனால், தமிழ் நாட்டுச் சிறைச்சாலைகளிலெல்லாம் அடைக்கப்பட்டார். பாலகங்காதர திலகர், சுபாஸ் சந்திரபோஸ், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மூன்று பேரும் தான் அந்நாளில் விடுதலைப் போரில் குறிப்பிட்டுப் பேசப்பட்டவர்களாவர். மிதவாதத்தால் நாடு விடுதலை அடையாது; தீவிரவாதம் வேண்டும் என்று இந்த மூன்று பேரும் தான் இளைஞர்களைத் தட்டி எழுப்பி அஞ்சாமல் முன் நின்றவர்களாவர். அப்படிப்பட்ட நல்லவருக்கு, வல்லவருக்கு, தியாக சீலருக்குப் புரட்சித்தலைவி அவர்கள் தமிழக முதலமைச்சராக வராமலிருந்திருந்தால், சென்னையில் திருவுருவச் சிலையே வைக்கப்பட்டிருக்காது என்பது நிச்சயம். எவ்விதத் தியாகத்திற்கும் தயாரானவர் என்பதாலேதான் தேவர் அவர்களின் தியாகத்தை மதித்துப் போற்றி வருகிறார் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்".

–விழா முடிவில் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர் திரு. துரை. ராஜ்குமார் நன்றி கூறினார்.




# 'தேசிய உடல்நலக் கொள்கையைச் செயல்படுத்துவதில் மற்ற மாநிலங்களுக்குத் தமிழகம் வழிகாட்டியாக இருக்கும்'

## 'ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி' விழாவில் முதலமைச்சர் பெருமிதம்

**ஸ்ரீ** இராமச்சந்திரா மருத்துவமனையில் புதிய இருதயச் சிகிச்சைப் பிரிவு மற்றும் சிறப்பு மருத்துவப் பிரிவுகளின் என்றும் நினைவில் நிற்கக் கூடிய துவக்க விழாவில் கலந்து கொள்வதிலும், புகழ்பெற்ற மருத்துவர்கள் அர்ப்பணிப் புள்ளம் கொண்ட பேராசிரியர்கள், உற்சாகம் மிக்க மாணவர்கள், பணியாளர்கள் நடுவே உரையாற்றுவதிலும்பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கடந்த பல ஆண்டுகளாகப் போற்றத்தகுந்த பணிக்குப் பிறகு, தமிழ்நாட்டு மருத்துவக் கல்வியிலும், மருத்துவப் பணியிலும், தனக்கென ஒரு சிறப்பான இடத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். சென்னை நகருக்கு வெளியே அமைந்துள்ள முக்கியமான இந்த மருத்துவ நிறுவனம், தன்னுடைய கடுமையான உழைப்பினாலும், நமது மாநில மக்களின் நல்வாழ்வில் தான் ஏற்படுத்தியுள்ள அர்த்தமுள்ள தாக்கத்தினாலும், மேன்மையும் புகழும் அடைந்துள்ளது.

நாட்டின் கட்டுமானப்பணியில் தனியார் முயற்சி இருக்கவேண்டும் என உறுதிபட நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். மறுகூட்டமைப்பு நிலையில் உள்ள நம் நாட்டைப் போன்ற நாடுகளுக்கு, எல்லைப் பகுதிகளிலிருந்தும் அதிக அளவில் திறமைகள் தேவைப்படுகிறது. அப்பொழுதுதான் ஒரு வலிமையான நாடாக வெளிப்பட முடியும். வறுமை இல்லாத இந்தியாவாக, எழுத்தறிவில்லாத, நோய் மற்றும் அறியாமை இல்லாத இந்தியாவாக முடியும். இந்தச் சந்தர்ப்பத்தில், உடல்நலக் கேடுகளால் பாதிக்கப்பட்டு வாடும் மக்களை நலப்படுத்த, ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி, சமுதாயத்திற்கு நீண்ட பங்கை அளிக்கும், ஸ்ரீ இராமச்சந்திரா கல்வி மற்றும் நல அறக்கட்டளையின் மேலாண்மை அறங்காவலர் திரு. இராமசாமி உடையார் அவர்களின் சீரிய முயற்சிகளை, நாம் முழுமனதோடு பாராட்ட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில், புதிய எண்ணங்களுடனும், மனிதாபிமான அணுகுமுறையுடனும், இந்தப் புகழ் வாய்ந்த மருத்துவ நிறுவனத்தை ஏற்படுத்திய கொடையுள்ளம் கொண்ட தொழிலதிபர் திரு. இராமசாமி உடையார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, இந்தக் குறிப்பிடத்தகுந்த நிறுவனத்தில் இருக்கின்ற வசதிகளுடன், புதிய இருதயச் சிகிச்சைப்





## அட்டை சொல்லும் செய்தி

பிரிவு மற்றும் சிறப்பு மருத்துவப் பிரிவுகள் சேர்க்கப்படுகின்றன. நகரத்திலிருந்து தொலைவில் அமைந்துள்ள நிறுவனங்களின், அதுவும் குறிப்பாக மருத்துவ நிறுவனங்களின் வெற்றிகளைக் குறித்து வெளிப்படுத்தப்பட்ட சந்தேக நாட்களெல்லாம் முடிவடைந்து விட்டன. ஆனால் இன்று, சுற்றுப்புறச் சூழல்களை முதன்மையாகக் கொண்டு, வியாபார நிறுவனங்கள் புறநகர்ப் பகுதிகளிலும், கிராமப் புறங்களிலும் வளர்ந்து – விடுதலை, பாராட்டுதலுடன் வரவேற்க வேண்டும்.

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனை உடல் நலத்தின் முக்கியத்துவத்தைச் சரியான தொலைநோக்கு உணர்வில் புரிந்துகொண்டு சமுதாயத்தின் கீழ்த்தட்டிலுள்ள மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதை, சிறப்பாக, இருதயச் சீர்கேடுகளைப் பொறுத்தவரையில் ஈடுபடுத்திக் கொள்வதை உணர்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

தற்காலத்தில், இந்தியாவில், பல குழந்தைகள் பிறக்கும் போதே இதயக் கோளாறுகளுடன் பிறக்கின்றன. அவைகள் சரியாகக் கண்டுபிடிக்கப்பட்டு, மருத்துவம் அளிக்கப்பட்டாலொழிய, அந்தக் குழந்தைகள் தங்களுடைய இளமைப் பருவத்தைக் காண உயிரோடு இருக்க மாட்டார்கள். இதயக் கோளாறுடன், குழந்தைப் பருவத்தில் வாத ஜுரம் ஏற்பட்டு, இதயக் குழாய் அடைப்பினால் பாதிக்கப்பட்டு, இளைஞர் பருவத்தில் இதயக் கோளாறுகள் ஏற்படுகிறது. இந்த இரண்டு காரணங்களல்லாமல், சமீப காலமாய், மாரடைப்பு ஏற்படுவது குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்து அதன் விளைவாக, ஒவ்வொரு ஆண்டும், ஆயிரக்கணக்கான மக்கள் செயலிழந்தும், இறந்தும் விடுகிறார்கள். இந்தப் பிரச்சினைகளுடன், தீர்க்கக்கூடிய தீர்வுகளை எண்ணி, இந்தப் புதிய இதயச் சிகிச்சைப் பிரிவு இந்த மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது. குழந்தைகளும், பெரிய வயதினர்களும் பாதிக்கப்படுகின்ற நோய்களைத் தீர்க்கும் முயற்சிகள் எடுக்கப்படும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த மையம், சமுதாயத்தின் கீழ்த்தட்டிலுள்ள மக்களின் – குறிப்பாக வறியவர்களுடைய தேவைகளைத் தீர்ப்பதில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்பது எனது உண்மையான விருப்பமாகும்.

அரசுத் தரப்பில், கடந்த மூன்று ஆண்டுகளாகக் குறிப்பிடத்தகுந்த பிரச்சினையான இதய நோய்ப் பிரச்சினையில் உண்மையான பெருமைப்படத்தக்க வகையில் அக்கறை காட்டப்பட்டு வருகிறது. இப்படி, பரவலாகப் பரவியிருக்கின்ற, பிறப்போடு ஏற்படுகின்ற இதயக் கோளாறுகள் கொண்ட குழந்தைகளுக்கு உடனடியாகச் சிகிச்சை தர “திறந்த இதய அறுவை இலவசச் சிகிச்சை” என்ற திட்டம் கொண்டு வந்தேன். இத்திட்டம் ‘15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம்’ என்று என்னால் 1993 நவம்பரில் தீட்டப்பட்ட திட்டத்தின் ஒரு அம்சமாகும்.

அனைத்து இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் இதயக் கோளாறுடைய குழந்தைகளுக்கு அரசாங்கத்தின் முழு ஆதரவுடன் மருத்துவச் சிகிச்சை, அதுவும் திறந்த இதய அறுவை இலவச் சிகிச்சை அளிக்கும் திட்டம் செயல்படுகிறது என்பதைக் குறிப்பிடுவதில் பெருமை கொள்கிறேன்.

அதேபோல, பெரியவர்களுக்கு ஏற்படும் இதயக் கோளாறுகளும், குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மருத்துவ முக்கியத்துவம் அளவிலேயே அளித்துக் கவனிக்கப்படுகின்றன. நம் அரசு பொறுப்பேற்றதிலிருந்து, உயிர்வாழத் தேவைப்படும் அறுவைச் சிகிச்சை – குறிப்பாக, திறந்த இதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை ஆகியவற்றைச் செய்து கொள்ளும் ஏழைகளுக்குப் பொருளாதார உதவி அளிப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறது. திறந்த இதய அறுவைச் சிகிச்சைக்கு

ரூ.15,000 உதவிப் பணமும், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு ரூ.20,000 உதவிப் பணமும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உயர்த்தி அளிக்கப்படுவதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமுள்ளதாகும் எனக் கருதுகிறேன். இதுவரை அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 1,650 பேர் பலனடைய ரூ.1.75 கோடி அளிக்கப்பட்டுள்ளது என்பது மகிழத்தக்கது. பண உதவி அளிப்பதும், உயர்த்துவதும் தவிர, இந்தத் திட்டம், பாதிக்கப்பட்டோர் உடனடி சிகிச்சை பெறும் வகையில் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உடனடி அறுவைச் சிகிச்சைக்காகப் பல மருத்துவமனைகள் பட்டியலிடப்பட்டுள்ளது. அதில் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனையும் அடங்கும்.

தமிழகத்தில் முக்கிய நகரங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் இயங்கும் இதயச் சிகிச்சைப் பிரிவில் குறிப்பாக, சென்னை நகரிலுள்ள சென்னை அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் மிக் சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகிறது எனக் குறிப்பிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நமது அரசு மருத்துவமனைகள் தங்களது வசதிகளையும், திறமைகளையும் சர்வதேசத் தரத்திற்கு ஏற்றாற்போல் கொண்டு பலன்களும் உயர்ந்த தரத்தில், வெளிநாட்டிலுள்ள மருத்துவமனைகளுக்குச் சமமாக ஒப்பு நோக்குடன் இருப்பதைக் கூறுவதில் பெருமை கொள்கிறேன். அரசு மருத்துவமனைகளால் எதிர் நோக்கப்படுகின்ற வசதிக் குறைவுகளையும் பல பிரச்சினைகளையும் பரிசீலித்தால் கூட, அவைகளின் சாதனைகள் போற்றத்தகுந்தவைதான்.

இதயச் சிகிச்சைப் பிரிவுடன், சிறப்புச் சிகிச்சைப் பிரிவையும் இந்த மருத்துவமனையில் துவக்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தச் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு பல சிறப்புச் சிகிச்சைகளைப் பலவிதங்களில் முறைப்படுத்தி, நோயாளிகளின் பலதரப்பட்ட பிரச்சினைகளை ஒரே இடத்தில் கவனிப்பதாக இருக்கும் என என்னிடம் கூறப்பட்டது.

சிறப்புச் சிகிச்சை என்பது தனித் தனிப் பிரிவாக இருக்கும் காலத்தில், ஒருவருக்கு மற்ற சிறப்பு மருத்துவர்களின் மருத்துவம் கிடைக்காமல் போகும் ஆபத்து உண்டு. அந்த உணர்வில் பலவிதப் பிரிவுகளாக முறைப்படுத்துவது என்பது தொழில் வல்லுநர்கள், குறிப்பாக மருத்துவர்கள் ஒருசேரத் திறமைகளைப் பயன்படுத்த ஏதுவாகும். நரம்புச் சிகிச்சை மையம், காயங்கள் சிகிச்சை மையம், சிறுநீரகச் சிகிச்சை மையம், உறுப்புமாற்றப் பிரிவுகள் எனச் சிறப்புப் பிரிவுகள் இன்று தொடங்கப்பட்டுள்ளன. இதனுடன் துணைப் பணிமையங்களாகப் பல பிரிவுகள் இன்று சேர்க்கப்படுகின்றன என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. மருத்துவப் பரிசோதனை நிலையம் புதிய அறுவைச் சிகிச்சை அரங்கங்கள், அறை வசதிகள்- இப்படிப் பல இன்று சேர்க்கப்படுகின்றன. இந்த மதிப்புள்ள சேர்க்கைகள் மருத்துவநலக் கவனிப்பில் உயர்ந்த தரத்தை உருவாக்கும் என நம்புகிறேன். இந்த அறக்கட்டளை 'தொட்டில் குழந்தைகள்' திட்டத்தின் கீழ், அரசினால் தத்தெடுக்கப்படும் தொட்டில் குழந்தைகளுக்கு, இலவச மருத்துவச் சிகிச்சை அளிக்கும் என அறிவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையிலேயே, இது போன்ற பெரிய செயல்கள் மற்றவர்களாலும் பின்பற்றப்படவேண்டியவை.

இப்படிப்பட்ட பெருந்தன்மை மிக்க சேவைக்காக, திரு. இராமசாமி உடையாருக்குத் தமிழக அரசின் சார்பாக என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவமனையில் தற்போதுள்ள வசதிகளைப் பெருக்குவதில் தமிழக அரசு எடுத்துவரும் சில முக்கிய நடவடிக்கைகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன். அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் 11 கோடி ரூபாய் செலவில் கட்டட வசதிகள், பழுதுபார்த்துச் சீரமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று உள்ளன. இதய சிகிச்சைத் துறைக்கு ரூ.72 இலட்சம் செலவில் 9 நவீன வேன்கள் வாங்கப்படவுள்ளன. ரூ.30 இலட்சம் செலவில் மருத்துவமனைகளில் கணிப்பொறி வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவ மனைகளிலும் தாராளமாக, தட்டுப்பாடின்றி மருந்து கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை முறைப்படுத்தும் பணியைத் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் செய்யும்.

தமிழ்நாடு முழுவதும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டதில் 14 வயதுக்கு உட்பட்ட 48.5 இலட்சம் மாணவ மாணவிகள் பயன் பெற்றது குறிப்பிடத்தக்கது.

நமது அரசு எடுத்துவரும் புதிய நடவடிக்கைகள் மிகச் சிறப்பான





பலனைத் தருகின்றன எனத் தெரியும்போது மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் இப்போது குறைந்து உள்ளது. 1000 பேருக்கு 19.2 பேர் என்ற அளவில் பிறப்பு விகிதம் உள்ளது. தேசிய அளவில் அது 1000 பேருக்கு 28.5. இதே வழியில் தமிழ்நாடு 2000 ஆண்டில், 1000 பேருக்கு 15 பேர் என்று தேசிய குடும்ப நலக் குறிக்கோளை அடைந்துவிடும் என நினைக்கும் போது பெருமிதம் கொள்கிறேன். தேசிய உடல்நலக் கொள்கையைத் தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயல் படுத்தி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்பது எனது உண்மையான நம்பிக்கை யாகும்.

எனது தலைவரும், எனது ஆசானு மான புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பெயரில் அமைந்துள்ள இந்த மருத்துவமனை விழாவின் போது, அவருக்கு இந்தச் சந்தர்ப் பத்தில் எனது வணக்கத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன். ஏழை எளிய மக்களுக்காகப் புரட்சித்தலைவர் பாடுபட்டார். அவரது பெயரால் அமைந்துள்ள இந்த மருத்துவமனை ஏழை, எளிய மக்களுக்கு மேலும் சேவை செய்திட வேண்டும்.

இந்த நிறுவனத்துடன் தொடர்பு டையவர்கள் ஒவ்வொருவரும் பல் கலைக்கழக மானியக்குழு, சமீபத் தில் இக்கல்லூரியைக் கருதப்பட்ட பல்கலைக் கழகமாக அறிவித்த வுடன் மகிழ்ச்சியும், பெருமிதமும், உண்மையான நியாய உணர்வும் அடைந்திருப்பார்கள். இந்நிறுவனம், மென்மேலும் வளர்ந்து வலிமை பெற்று உலகிலேயே மிகச் சிறந்த மருத்துவ நிறுவனமாக விளங்கும் என நம்புகிறேன். திரு. இராமசாமி உடையார், மருத்துவமனையின் தலைவர், பல்வேறு துறைகளின் தலைவர்கள், பணியாளர்கள், என்னுடைய அன்பான மாண வர்கள் ஆகியோர்க்கு இந்த நினை வில் நிற்கும் நாளில் எனது நெஞ் சார்ந்த பாராட்டுதல்களைத் தெரி வித்துக் கொள்கிறேன். ஸ்ரீ இராமச் சந்திரா மருத்துவக் கல்லூரியில் இந்த இதயச் சிகிச்சைப் பிரிவு மற்றும் சிறப்பு மருத்துவச் சிகிச் சைப் பிரிவு ஆகியவற்றைத் திறந்து வைத்து, நல்ல ஒளிமயமான எதிர் காலம் பெற வாழ்த்துகிறேன்.

**—மாண்புமிகு தமிழ்நாடு முதல மைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 3.11.1994ல்- 'போரூர் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி'யில் இதயச் சிகிச்சைப் பிரிவுகளைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.**



# மருத்துவ நலத் திட்டம்

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் 'சத்துணவுத் திட்டம்' இந்திய நாட்டிலேயே முதன் முறையாகக் கொண்டு வரப்பட்டது. அனைத்து நாட்டு மக்களும் இத்திட்டத்தின் பயனைக் கண்டு, நாம் பெருமைப்படும் வகையில் வியந்து போற்றுகின்றனர். புரட்சித் தலைவரின் தொலை நோக்கினைப் பாராட்டுகின்றனர்.

அதேபோல், மருத்துவ நலத் திட்டமும் தமிழ்நாட்டில் குறிப்பாகக் கிராமங்களில் வாழும் மக்களுக்கும், அவர்தம் குழந்தைகளுக்கும் நல்வாழ்வினை அளித்து, எதிர்காலத்தில் தமிழகத்தின் வளர்ச்சிக்கு உரிய, திடகாத்திரமான உடல் வலிவைப் பெற்றவர்களாக அவர்கள் திகழ உதவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பு நோக்கும்போது, தமிழ்நாட்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள், சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன.

**-புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-1-லிருந்து**




அட்டை சொல்லும் செய்தி

# ஆர்.எஸ். மனோகருக்கு 'நாடகச் செம்மல்' பட்டம்

## "திருநாவுக்கரசர்" மேடை நாடகம் 50-வது காட்சி: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பாராட்டு விழாப் பேருரை

"தமிழ் நாடக உலகிற்கு அரும் பணியாற்றி, தமிழ் நாடகத்தின் தலைமகனாய்த் திகழும், நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின், கலைச் சேவையைப் போற்றும் முகத்தான், ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்த இனிய பாராட்டு விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழகத்தின் கலை வடிவங்களிலேயே, மிகத் தொன்மையும், சிறப்பும் வாய்ந்த ஒரு கலை, நாடகக் கலையாகும். மொழியை இயல், இசை, நாடகம், என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்த சிறப்பை உடையவர்கள் நாம். நாடகத் தமிழ் வாயிலாகத் தமிழ் மொழி உணர்வு வளர்ந்தது; நாட்டுப் பற்று வளர்ந்தது; தேசிய உணர்வு வளர்ந்தது.

ஆரம்ப காலத்தில் சங்கரதாஸ் ஸ்வாமிகள், தமிழ் நாடகக் கலையை வளர்த்தார். பின்னர் Boys Company, T.K. சண்முகம் சகோதரர்கள், நவாப் ராஜ மாணிக்கம் ஆகிய நாடகக் குழுக்கள், நாடகக் கலையை அரும்பாடுபட்டு வளர்த்தன. மக்கள் மத்தியில், நாடகக் கலை மீது, ஒரு ஈடுபாடு ஏற்பட, இந்த நாடகக் குழுக்கள், ஒரு காரணமாக இருந்தன.

அந்த காலக் கட்டத்திற்குப் பின்பு, நாடகக் கலை நசியத் தொடங்கியது. அந்தச் சூழ்நிலையில், நாடகக் கலைக்கு மீண்டும், ஒரு புத்துயிர் ஊட்டியவர், நாட



கக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் என்றால், அது மிகையாகாது.

திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள், நாடகத் துறையை மேற்கொள்ளாமல் மட்டும் இருந் திருந்தால், என்னுடைய தலை முறையைச் சேர்ந்தவர்களுக்கு, எத்தகைய நல்லதொரு கலை, இந்த நாடகக் கலை என்பது, தெரியாமலேயே போய் விட் டிருக்கும்.

எனது சிறு வயது முதலே, திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின் நாடகங்களைக் காண்பது என் றால், எனக்கு ஒரு தனி மகிழ்ச்சி. இன்னும் சொல்லப்போனால், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர் களின் நாடகங்கள், எனது வாழ்க்கையின், ஒரு நிலையான அம்சமாக மாறி விட்டது, என்று கூட என்னால் கூற முடியும். ஏன் என்றால் - குழந்தைப் பருவம், பள்ளிப் படிப்பு, இளமைப் பருவம், பின்பு திரைப்பட உலகக் கலைச் சேவை, திரைப்பட உலகில் இருந்து ஓய்வு, எழுத் தாளராகப் பணியாற்றுதல், அர சியல் மற்றும் பொது வாழ்க்கை யில் ஈடுபாடு என்று பல்வேறு வித்தியாசமான காலக் கட்டங் களை, எனது வாழ்க்கையில் நான் சந்தித்த போதிலும் திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின் நாடகங்கள்மீது, சிறு வயது முதலே, எனக்கு இருந்த ஈடு பாடும், பிடிப்பும், இன்றும் சற்று கூட குறையவில்லை. இன்றைய தலைமுறையினர், வரலாற்று நாடகங்களைக் கண்டு களிப் பதற்கு, வாய்ப்பை ஏற்படுத்திய வர், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள் என்பதில், சந்தேகம் இல்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களுக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக, அவர் நாடகத்தில் தொடர்ந்து நடிக்க, இயலாத ஒரு சூழ்நிலை உண்டானபோது, நான் உண்மை யில் மிகவும் வருத்தம் அடைந் தேன். திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின், அற்புதமான சரித் திர நாடகங்களை, இனி மேல் நம்மால் காண முடியாதே என்ற ஆதங்கம் என் மனதில் ஏற் பட்டது.

நான் முதலமைச்சராகப் பதவி ஏற்ற உடன், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களது கலைத் திறமையை, எப்படியாவது பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன், அவரைத் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் செயலாளராக நியமனம் செய்தேன். தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினை நன்கு உணர்ந்து, தமிழக அரசின் எண்ணங்களுக்கு, இயல், இசை, நாடக மன்றத்தின் மூலமாக, திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள், செயல் வடிவம் கொடுத்து, சிறப் பாகச் செயலாற்றி வருகிறார்கள்.

ஒரு முறை தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செய லாளர், திரு. T.V. வெங்கட்ராமன் அவர்களுடன், நாடகக் கலை நசிந்து விடாமல், பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து, நான் பேசிக் கொண்டிருந்த போது திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களின், வரலாற்றுச் சிறப்பு மிக்க சரித்திர நாடகங்கள் வீடியோ படம் எடுக்கப்பட்டு, பாதுகாக்கபடவில்லையே என்ற ஆதங்கத்தையும், வருங்காலத் தலைமுறையினர், இந்த நாடகக் கலையின் சிறப்பினை, உணர் கின்ற வாய்ப்பை இழந்து விடு வார்களே, என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

தமிழக அரசின் சார்பில், சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், என்று எண்ணினேன். அதன் முதல் கட்டமாக, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை யின் சார்பில், சமயக் குரவர் நால்வரில் ஒருவரான, திருநாவுக் கரசரின் வாழ்க்கை வரலாற்றை, திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர் களைக் கொண்டு, மேடை நாடக மாகத் தயாரிக்கலாம், என்று முடிவு செய்து, முன்னாள் தலைமைச் செயலாளர் மூலமாக திரு. ஆர்.எஸ். மனோகருக்குத் தெரிவித்தேன்.

அதன்படி திருநாவுக்கரசர் நாடகத்தை உருவாக்குகின்ற பொறுப்பை, திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் ஒப் படைத்தபோது, எனது எண்ணங் களை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற, ஒரு உந்துதலின் காரணமாக, தனது பிரச்சி னைகள் எதையும் என்னிடத்தில் தெரிவிக்காமல், எனது விருப் பத்தை எப்படியேனும் நிறை வேற்றித் தருகிறேன் என்று, என் னிடம் உறுதி அளித்தார்.

சற்று முன்பு 50-வது காட்சி யாக, நீங்கள் கண்டுகளித்த, திருநாவுக்கரசர் என்ற, இந்த அற் புதமான கலைப் படைப்பு, *24.8.1994* அன்று, எனது முன்னி லையில், முதன் முதலாக அரங் கேற்றம் ஆனது.

☆ மற்றவர்களிடம் பழகும் விதத்தையும் ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக்கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.



இரண்டரை மாதத்திற்குள், இந்த இனிய நாடகம், 50 முறை மேடை ஏற்றப்பட்டுள்ளது என்பதிலிருந்து, மக்கள் மத்தியில், எத்தகையதொரு மகத்தான வரவேற்பை, இந்த நாடகம் பெற்றுள்ளது என்பதை, நாம் புரிந்து கொள்ள முடியும்.

இந்த மேடை நாடகம், திரு ஆர்.எஸ்.மனோகர் அவர்களின், வெற்றி மகுடத்தில் பதிக்கப்பட்ட, இன்னுமொரு மாணிக்கக் கல். வரலாற்றுக்கதாபாத்திரங்களுக்குப் புது வடிவம்; காட்சிக்குக் காட்சி மாறும், பிரம்மாண்டமான ஜோடனைகள்; பொருள் பொதிந்த, அர்த்தமுள்ள வசனங்கள்; சிந்தனையைத் தூண்டும் நகைச்சுவை; சரித்திரக் காலத்து, கண் கவர் ஆடை அணிகலன்கள் ; நேர்த்தியான காட்சி அமைப்பு ; இனிமையான இசை ; இவை எல்லாம், திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களின் நாடகங்களில், அவரது தனி முத்திரையுடன் விளங்குவதை, இன்றும் நாம் காணலாம்.

தனது நாடகக் குழுவைக் கலைத்து விட்டு, 6 வருடங்களாக மேடை நாடகங்களில் இருந்து ஒதுங்கியவர் ; மீண்டும் அந்த நாடகக் குழுவை ஒன்று சேர்த்து, ஓர் அற்புதமான, கலைத் திறன் மிகுந்த மேடை நாடகத்தை, உருவாக்கிக் காட்டுவது என்பது, மிகவும் கடினமான செயல் ஆகும். 6 வருடங்களாக திரு. ஆர்.எஸ்.மனோகர் மேடையில் நடிக்கவில்லை, என்ற விவரம் தெரிந்தவர்களுக்குத் தான், இது புரியுமே தவிர, இந்த நாடகத்தை மட்டுமே கண்டு களித்தவர்களுக்கு, 6 ஆண்டுளுக்குப் பிறகு, இவர் மேடை நாடகத்தை அமைத்து நடித்திருக்கிறார், என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. அந்த அளவிற்கு இந்த நாடகம், மிகச் சிறப்பாகவும், நேர்த்தியாகவும், ஏன்- அவரது பழைய நாடகங்களை விட, மேலும் சிறப்பாகவும் அமைக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவதில், நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கண்ணிமைக்கும் நேரத்தில் காட்சி மாற்றங்கள்- நொடிப் பொழுதில் நேர்த்தியான ஜோடனைகள் தேவை எனில், அது மயிலானாலும், பாம்பானாலும், அல்லது யானையே ஆனாலும், அதனை மேடையில் அரங்கேற்றி, காண்போரை அதிசயிக்கச் செய்து, மனதைக் கவருகின்ற ஆற்றல், திரு. மனோகர் அவர்களுக்கே உரித்தான, தனித் திறமையாகும்.

சற்று முன் இந்த நாடகத்தில், யானையை மேடையில் தோன்றச் செய்த காட்சி, உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒரு அம்சமாகும்.

இந்த நாடகத்தின் அரங்கேற்றத் தின்போது, என்னுடன் இந்த நாடகத்தைப் பார்க்க வந்திருந்த சில குடும்பத் தலைவிகள், நாடக மேடையில் யானையை எப்படிக் கொண்டு வர முடிந்தது என்று, ஆச்சரியத்துடன் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். மேடையில் தோன்றிய யானையை, உயிருள்ள நிஜ யானை என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது, அப்போது தான் எனக்குப் புரிந்தது. அது உண்மையான யானை அல்ல என்பதை நான் அவர்களுக்கு விளக்கிய போது, அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். அந்த அளவிற்கு அந்தக் காட்சியினைப் பார்ப்பவர்கள் மனதில் பதியும்வண்ணம் தத்ரூபமாகச் செய்து காட்டியுள்ளார், திரு. மனோகர் அவர்கள்.

தமிழ்த் திரையுலகிலும், தமிழ் நாடக மேடையிலும், தனக்கே உரித்தான தனி முத்திரையைப் பதித்த, ஒரு அபூர்வமான கலை வித்தகர், திரு மனோகர் அவர்கள். பொதுவாக, நாடகங்களை ஏணியாகக் கொண்டு, வெள்ளித் திரை உலகிற்கு வருபவர்கள், தாய் வீடு போன்ற நாடக மேடையை, மறந்துவிடும் சூழ்நிலையைத் தான், நாம் கண்டிருக்கிறோம்.

ஆனால், முதன் முதலாகத் திரை உலகில் கதாநாயகனாகவே நுழைந்து, கிட்டத்தட்ட 13 படங்களில் நடித்த பின்பு, வில்லன் நடிகராகத் தன்னை மாற்றிக் கொண்டு, தனக்கென்று ஒரு தனி இடத்தைத் தமிழ்த் திரை உலகில் பெற்றுவிட்ட நிலையில் திரு. மனோகர் அவர்கள், நாடகக் கலை வளர்ச்சிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டது, ஒரு வரலாற்றுப் புதுமை என்றே சொல்லலாம்.

நாடகக் கலை நசிந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும் என்ற உந்துதல் ஒரு புறம்; உள்ளத்தில் பொங்கி எழும், தனது நடிப்பு ஆற்றலுக்கு, நாடக மேடை தான், வடிகால் அமைக்க முடியும் என்ற உணர்வு, மறுபுறம். இந்த இரண்டு உணர்வுகள்தான், திரு. மனோகர் அவர்களை, நாடக உலகிற்கு அழைத்துச் சென்றது.

திரு. மனோகர் அவர்களது, ஈடு இணையற்ற கலைச் சேவையைப் பாராட்டி, நமது புரட்சித்

தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் கொடுத்த, "நாடகக் காவலர்" என்ற பட்டம், எத்தனைப் பொருத்தமானது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நம் மனம் மகிழ்ச்சி கொள்கிறது.

'நேஷனல் தியேட்டர்ஸ்' நாடகக் குழுவினை, அவர் ஏற்படுத்திய பின்பு, இதுவரை, 7807 முறை, மேடை நாடகங்களை நடத்தி உள்ளார். அற்புதமான இந்த 'திருநாவுக்கரசர்' மேடை நாடகம் உட்பட, மொத்தம் 29 மேடை நாடகங்களை அரங்கேற்றி, சிறப்புற நடத்திக் காட்டி இருக்கிறார் என்ற உண்மை, நம்மை எல்லாம் பிரமிப்பில் ஆழ்த்துகின்றது.

திரு ஆர்எஸ்மனோகர் அவர்கள், இதிகாசக் கதாபாத்திரங்களை மையமாக வைத்து, வரலாற்று நாடகங்களைப் புனைந்து நடத்துகின்ற விதமே, ஓர் அலாதியான தனி அழகு என்பதை, அவருடைய நாடகங்களைக் கண்டு களித்தவர்கள், அனைவரும் ஒப்புக் கொள்வார்கள், நாடகம் பார்க்கின்ற உணர்வு மாறி, பாத்திரத்தின் மீது, ஒரு புதிய வாஞ்சையை ஏற்படுத்தி விடுவார். நாடகங்களின் மூலம், அத்தகைய ஒரு தாக்கத்தை, ரசிகர்கள் மனதில் ஏற்படுத்தக் கூடிய, திறமை படைத்த ஒரு வல்லவர், திரு. மனோகர் அவர்கள்.

அவரது 'இலங்கேஸ்வரன்' நாடகம் மட்டும், 1,700 முறை, மேடை ஏறியுள்ளது. நாடகக் கலை வரலாற்றில், இது ஒரு மாபெரும் சாதனை ஆகும். நமது நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களும், இந்த நாடகத்தைக் கண்டு களித்திருக்கிறார்கள். இராவணனை ஒரு அரக்கனாக, கெட்ட சிந்தை படைத்தவனாகச் சித்திரிக்கப்பட்டு பார்த்துப் பழகிப்போன மக்கள் மத்தியில்- இராவணனின் கதாபாத்திரத்தை, திரு. மனோகர் சித்திரித்துக் காட்டிய விதம், இராவணன் மீது ஒரு ஈடுபாட்டை, பலர் மனதில் ஏற்படுத்தி விட்டது.

வரலாற்றிலும், இதிகாசங்களிலும், புராணங்களிலும், அனைவராலும் விரும்பப்படும், நல்ல கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய தனித்தன்மைகளை, வெளிக் கொணரும் வகையில், நாடகங்களை அமைப்பது, அவ்வளவு கடினமான காரியம் அல்ல! ஆனால், கொடியவர்கள் என்று, மக்களால் நம்பப்படுகின்ற, சரித்திர மற்றும் புராணக் காலத்து கதாபாத்திரங்களில் மறைந்துள்ள சிறப்புத் தன்மைகளை வெளிப்படுத்தும் வகையில், மேடை நாடகங்களைத் தந்திரக் காட்சிகளுடன், தத்ரூபமாக அமைத்துக் காட்டி, மக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெறும், வெற்றி நாடகங்களாக நடத்திக் காட்டுவது, எளிதான செயல் அல்ல.

திரு. ஆர்.எஸ்.மனோகர் ஒருவரால் மட்டுமே, அதைச் செய்து காட்ட இயலும் என்பதுதான், வரலாறு காட்டும் உண்மை.

இவர் மேடையில் உருவாக்கி, உயிர் பெறச் செய்த கதாபாத்திரங்களை எண்ணிப் பார்த்தால், ஒரு பிரமிப்பு தான் ஏற்படுகின்றது. இலங்கேஸ்வரன், சூரபத்மன், இந்திரஜித், விஸ்வாமித்திரர், சுக்கிராச்சாரியார், துரோணர், சாணக்கியர், சிசுபாலன், மாலிக் காபூர் என்று பல கதாபாத்திரங்களை, நாயகர்களாக மாற்றிக் காட்டி, நாடக ரசிகர்களை மகிழ்வித்துள்ளார்.

## திருக்குறள்

கடைச்சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக்குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக்கும் ஒப்ப முடிவதாகும். அத்திரட்டு நூல்களுள்ளும் வள்ளுவர் நூல் தலை சிறந்ததென்பதற்கு இடை நெடுங்காலம் பிற பல நூலும் வழக்கிழந்தொழியவும் என்றும் பிரபல நூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம்.

—நாவலர்
ச. சோமசுந்தர பாரதியார்

ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் உரிய, ஒப்பனையையும், ஆடை அணிகலன்களையும் வழங்கி, அந்தக் கதாப்பாத்திரமே, மீண்டும் ஒரு முறை உயிர் பெற்று, நம் கண் முன்னே வாழ்வதைப் போன்ற, ஒரு அற்புதமான பிரமையை ஏற்படுத்துவதில் வல்லவர், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள்.

பொதுவாக, நாடகத்தில் நேர்த்தியாகக் காட்சிகளை அமைப்பது என்பது, மிகவும் கடினமான பணி ஆகும். அதிலும், குறிப்பிட்ட காட்சிக்குத் தகுந்தாற்போல, இதிகாச வரலாற்றுப் பின்னணியோடு, ஜோடனைகளையும், அரங்கப் பொருட்களையும் நிர்மாணிப்பது என்பது, இன்னும் கடினமான பணி என்பது, நாடகத் துறையைப் பற்றி அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால், திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்களுக்குக் கண் இமைக்கும் பொழுதில், காட்சிகளை மாற்றிக் காட்டுவது, கை வந்த கலையாகும்.

திரைப்படங்களிலும், நாடகங்களிலும், கொடியோரின் வேடங்களை, பெரும்பாலும் இவர் ஏற்றிருந்தாலும், உண்மை வாழ்க்கையில், அன்பு நெஞ்சம் கொண்ட ஒரு நல்லவர், திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள். அவரது நற்குணங்களும், நல்ல பழக்க வழக்கங்களும், இன்றும் அவரைப் பலருக்கு, நண்பராக்கி இருக்கிறது என்பதை, நான் நன்கு அறிவேன்.

இந்த அற்புதமான நாடகத்திற்கு, இசை அமைத்தவர், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர், இசை மேதை திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்; அவருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இந்த நாடகத்திற்கு வசனம் எழுதிய, திரு. கே.பி. அறிவானந்தம் அவர்களுக்கும், பின்னணி இசை அமைத்த, திரு. சி. சிகாமணி அவர்களுக்கும் மேடை நிர்வாகப் பொறுப்பு ஏற்றுள்ள, திரு. ஆர். நாகராசன் அவர்

களுக்கும் நகைச்சுவைப் பகுதி களை, அனைவரும் ரசிக்கும் வண்ணம் அமைத்துத் தந்த, திரு. என்.எஸ். ரவிசங்கர் அவர்களுக் கும் எனது இதயம் கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாடக உலகத்திற்கு, ஒரு புத்துணர்ச்சியை ஊட்டியுள்ள இந்த நாடகத்தில் பங்கு கொண்டு, சிறப்பாக நடித்த அனைத்துக் கலைஞர்களுக்கும், பின்னணியில் இருந்து நாடகத்தை வெற்றி கரமாக இயக்கிய, அனைத்துத் தொழில் நுட்பக் கலைஞர் களுக்கும், ஒப்பனைக் கலைஞர் களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அற்புதமான நாடகக் கலையை அதன் அழிவிலிருந்து காப்பாற்று வதற்கு, திரு. மனோகர் அவர்கள் ஆற்றிய அரிய கலைச் சேவையை யும், தனது சரித்திர மேடை நாட கங்கள் மூலம், மேடை நாடகக் கலைக்கு ஒரு புதிய பரிமா ணத்தை அளித்த அவரது படைப்புத் திறனையும் பாராட்டி, உங்கள் அனைவரின் சார்பில், திரு. மனோகர் அவர்களுக்கு, "நாடகச் செம்மல்" என்ற பட் டத்தை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

"நாடகச் செம்மல்" என்ற பட்டம், திரு ஆர்.எஸ்.மனோகர் அவர்களுக்கு, எல்லா விதத்திலும் பொருத்தமாக இருக்கும் என்ப தில், சற்றும் ஐயமில்லை.

"நாடகச் செம்மல்" திரு. ஆர்.எஸ்.மனோகர் அவர்கள், மேலும் பல புதிய நாடகங் களைப் படைத்து, நாடகக் கலைக்குத் தொண்டாற்ற வேண் டும், என்று கேட்டுக் கொள் கிறேன். அவர் நீண்ட ஆயுளு டன், எல்லா வளங்களும், நலன் களும் பெற்று, மேலும் புகழ் பெற்று வாழ வேண்டும் என்று, உங்கள் அனைவரின் சார்பிலும், மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## நேருவின் மணி மொழிகள்

யந்திரமும் யந்திரக் கைத்தொழிலும் வந்தபிறகு மதத்தின்பால் காட்டப்பட்டு வந்த அலட்சியம் இன்னும் அதிகரித்தது. குருட்டு நம்பிக்கையின் அடிப்படையை விஞ்ஞானம் தகர்த்தெறிந்துவிட்டது.

வாழ்க்கையே ஒரு விசித்திரமான கதம்பம் தான், நாம் அதை உள்ளது உள்ளவாறே எடுத்துக்கொண்டு முதலில் அதை அறியவும், பின்னர் அதைச் சீர்திருத்தவும் முயல வேண்டும்.

சாமானிய மக்களின் நலந்தான் நமக்கு மிகவும் முக்கியமானது. ஒரு சிலருக்காக நாம் மிகப்பலரைப் பலி கொடுக்க முடியாது.

உலகம் இருந்த இடத்திலேயே இருப்பதில்லை, யாரோ சொன்னது போல் நம்மைச் சரித்திரத் தின் குப்பைத் தொட்டியில் தள்ளிவிட்டு, அது முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

# தஞ்சைத் தரணியில்

# எட்டாவது

# உலகத் தமிழ் மாநாடு

## சிறப்பு ஏற்பாடுகளும் வளர்ச்சிப் பணிகளும்

**த**மிழ்மொழியின் தொன்மைச் சிறப்புக்கும், சீர்மிகு வளர்ச்சிக்கும் பெருமை சேர்க்கும் வகையில் இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளைக் கண்ட தமிழகம் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினை நடத்தும் பேறு பெற்றுள்ளது, தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது உலகமெங்குமுள்ள தமிழர்கள் பெருமைப்படத் தக்க தொன்றாகும்.

*1968*-இல் சென்னை மாநகரில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடும், 1981-இல் மதுரை மாநகரில் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சியின் போது ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடும் கண்ட தமிழகம், 1995-இல் தஞ்சைத் தரணியில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது.

"உலகத் தமிழாராய்ச்சிக் கழகம்" எனும் பன்னாட்டு அறிஞர்கள் குழுமியதொரு அமைப்பு இலண்டன் மாநகரில் நடத்த விருந்த இம்மாநாட்டினைத் தமிழகத்திற்குக் கொணர்ந்த பெருமை தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களையே சாரும்.

### எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிகழ்ச்சிகள் மாநாட்டு ஊர்வலம் மற்றும் துவக்க விழா

*1995*-ஆம் ஆண்டு சனவரி முதல் நாளன்று பிற்பகல் 3 மணியளவில் தொடங்கும் மாபெரும் மாநாட்டு ஊர்வலத்திற்குப் பின்னர், மாலையில் தமிழக முதலமைச்சரவர்கள் தலைமையில் துவக்க விழா கோலாகலமாக நடைபெறவும், இவ்விழாவில் மத்திய அரசின் முக்கியப் பிரமுகர் தலைமை விருந்தினராகவும், அயல்நாட்டுத் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், அறிஞர்கள் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகவும் கலந்து கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென முதலமைச்சரவர்களின் சீரிய தலைமையில் மாநாட்டு வரவேற்புக் குழு, நிதியமைச்சரவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் அமைப்புக் குழு, வருவாய்த் துறை அமைச்சர் தலைமையில் சிறப்பு மலர்க்குழு, உணவு அமைச்சர் தலைமையில் விருந்தோம்பல் குழு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தலைமையில் ஊர்வலக் குழு மற்றும் மருத்துவக் குழு, போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையில் போக்குவரத்து சுற்றுலாக் குழு, கைத்தறித் துறை அமைச்சர் தலைமையில் விளம்பரக் குழு, பொதுப்பணித் துறை அமைச்சர் தலைமையில் அரங்க அமைப்புக் குழு, வீட்டு வசதித் துறை அமைச்சர் தலைமையில் தங்குமிட வசதி வாய்ப்புக் குழு, சமூக நலத் துறை அமைச்சர் தலைமையில் கண்காட்சிக் குழு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் தலைமையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புக் குழு, கல்வியமைச்சர் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் குழு, உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் நகர் மேம்பாட்டுக் குழு, பேரவைத் தலைவர் தலைமையில் மாநாட்டு நிறைவு விழாக்

குழு ஆகியவை அமைக்கப் பட்டுள்ளன. அனைத்துக் குழுக் களின் பணிகளையும் ஒருங் கிணைத்து செயலாற்ற தலைமைச் செயலர் தலைமையில் ஒருங் கிணைப்புக் குழுவும் இயங்கி வருகிறது.

### பொது அரங்க நிகழ்ச்சிகள்

இம்மாநாட்டின் ஐந்து நாட் களிலும் பொது அரங்க நிகழ்ச்சி களாகக் கருத்தரங்கம், கவி யரங்கம்,பட்டிமண்டபம் இன்னிசை, தமிழிசை, நாட்டிய நாடகம், வரலாற்று நாடகம் போன்றவை சிறப்பான முறையில் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

### கண்காட்சி

மாநாட்டின்போது தஞ்சை நகரில் தமிழ் மொழியின் தொன் மைச் சிறப்பு, தமிழர் பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வண்ணம் அரசுத் துறைகள், நிறு வனங்கள் பங்கு பெறும் கண் காட்சி ஒன்று நடத்தப்படும்.

### ஒலி-ஒளிக் காட்சி

தமிழகத்தை ஆண்ட சோழ மன்னர்களின் வீர வரலாற்றைச் சித்திரிக்கும் ஒலி-ஒளிக் காட்சி யினை அயல் நாட்டறிஞர்கள் கண்டு பிரமிக்கும் வகையில், சிறப்பாகத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

### மாநாட்டு நிறைவு விழா

மாநாட்டு நிறைவு விழாவில் மிகப் பிரம்மாண்டமான அள வில் கலை நிகழ்ச்சிகள், வீர விளையாட்டுகள், சாகசங்கள், மாணவ மாணவியரின் ஆடல் பாடல், அணி வகுப்புகள் ஆகிய வற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.



எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு நினைவுக் கோபுரம்

**மாநாட்டிற்கான இதரச் சிறப்பு ஏற்பாடுகள்**

மாநாட்டிற்கு வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகக் கூடுதல் பேருந்து வசதிகளும், பகலில் இளைப்பாறவும், இரவில் தங்கிச் செல்லவும் பெரிய பந்தல்களும் அருகில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதிகளும் அளிக்கப்படவுள்ளன. தஞ்சை ரயில் நிலையத்தைப் புதுப்பிக்கவும், கம்ப்யூட்டர் முன் பதிவு வசதி, கூடுதல் ரயில்கள், குளிர் பதனப் பெட்டிகள் இணைப்பு ஆகிய ஏற்பாடுகளைச் செய்து தரவும் தென்னக ரயில்வே ஒப்புக் கொண்டுள்ளது.

பொதுமக்களுக்கு 300 கிராம் அளவிலான இரு வகை உணவுப் பொட்டலங்கள் "ஒரு பொட்டலம் ஒரு ரூபாய்" என்ற பெயரளவு விலையில் (Namesake price) ஆங்காங்கே விற்பனைக் கூடங்கள் மூலம் விநியோகிக்கப்படும். அத்துடன் குடிநீர்ப் பொட்டலங்களும் இலவசமாக வழங்கப்படும். தனியார் ஓட்டல்களிலும், தரமான பொது உணவு (common meal) தயாரித்து நியாயமான விலையில் உணவுப் பொட்டலங்களாக விற்பனை செய்ய ஓட்டல் உரிமையாளர்களுடன் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

**தஞ்சை நகரில் வளர்ச்சிப் பணிகள்**

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் அறிஞர்கள் வந்து கலந்து கொள்ளும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, தஞ்சை நகரில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு அரசு முன்னுரிமை அடிப்படையில் நிதியொப்பளிப்பு வழங்கியுள்ளது.

**புதிய இரயில்வே மேம்பாலம்**

40 ஆண்டுக் காலமாக தஞ்சை மக்களின் கோரிக்கையாக இருந்து வந்த புதிய இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி ரூபாய் 5 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

**இரயில்வே கீழ்ப்பாலம்**

போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும் வகையில் இரயில்வே கீழ்ப்பாலத்தை உயர்த்தி சாலை அகலப்படுத்தும் பணிகளை இரயில்வே துறையினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடுகளை இரயில்வே துறை தயாரித்து அளிக்கும். இது குறித்து தென்னக இரயில்வே பாலங்கள் தலைமைப் பொறியாளர் திரு. ரகுநாதன் அவர்களுடன் நேரில் கலந்து பேசி மதிப்பீடுகளை விரைவில் அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**புறவழிச்சாலை (By Pass Road or Ring Road)**

தஞ்சை நகர எல்லையில் பெரம்பலூர் மானாமதுரை சாலையிலிருந்து நாகப்பட்டினம், கடலூர், மைசூர் சாலை வரை 17.4 கி.மீ. வரையிலான புறவழிச் சாலை அமைக்கும் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது. ரிங் ரோடு (Ring road) எனும் புதிய பாணியில் அரைவட்டச் சாலையாக அமைக்கப்படும் இச்சாலையின் ஒரு பகுதி (Phase-I) மட்டுமே நடைபெற்று வருகிறது. இரண்டாவது பகுதி (Pase-II) சாலைப் பணிக்கான மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**சாலைகள்**

ரூ. 10.5 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைகளை அகலப்படுத்திச் சீரமைக்கும் பணிகளும், ரூ.2 கோடி மதிப்பீட்டில் நகராட்சி சாலைகளைப் புதுப்பிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**குடிநீர் வசதி**

தஞ்சை நகரில் குடிநீர்க் குழாய்கள் அமைக்கும் பணி ரூ.57.36 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மின்சார வசதி**

மாநாட்டின்போது தஞ்சை நகருக்குத் தேவைப்படும் கூடுதல் மின்சாரத்திற்கும் தங்குதடையின்றி மின்சார விநியோகத்திற்கும் ரூ.132 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகள் மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தஞ்சை அரண்மனையைப் புதுப்பிக்கும் பணிகள்**

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு முன்பணம் தொகையாக ரூ.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தஞ்சை நகரில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவுச் சின்னங்களாக நிலைபெறத் தக்க வகையில் நகரின்

**தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்**



அலங்கார நுழைவு வாயில்

நுழைவாயில்களில் 7 அலங்காரத் தோரண வளைவுகள், நினைவுக் கோபுரம், நினைவு மண்டபம், இராசராசசோழன் சிலை ஆகியவை நிறுவப்படவுள்ளன.

**பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் பணிகள்**

பெரிய அணைக்கட்டு கால்வாய்க் கரையினை அழகுபடுத்தி மின்விளக்குகளால் அலங்கரித்தல்.

சிவகங்கைப் பூங்கா மற்றும் இராஜப்பா தோட்டம் புதுப்பிக்கும் பணிகள். கண்காட்சி நடைபெறும் புனித பீட்டர்ஸ் பள்ளித் திடலுக்குச் சாலையமைத்தல். கல்லூரி விடுதிகளைப் புதுப்பித்தல். அரசுக் கட்டடங்களைப் புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**மாநிலக் கட்டுமானக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுடன், புறவழிச் சாலை அமைக்கும் பணிகளும், தஞ்சை நகரின் நுழைவாயில்களில் ஏழு அலங்காரத் தோரண வளைவுகளும்,நினைவுக் கோபுரம், நினைவு மண்டபம் அமைக்கும் பணிகளும், மாநிலக் கட்டுமானக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

**வீட்டுவசதி வாரியத்தால் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

மாநாட்டிற்கு வரும் அயல் நாட்டறிஞர்கள் தங்கும் வசதிக்காக தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் 83 உயர் வருமானப் பிரிவினருக்கான வீடுகள் ரூ.3.50

**பரவும் வகை செய்வோம் வாரீர்!**

கோடி மதிப்பீட்டிலும், 304 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் ரூ.5.20 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் வல்லம் என்னும் ஊரில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 480 மத்திய வருமானப் பிரிவினருக்கான வீடுகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகின்றது. இம் மாநாடு முடிந்த பின்னர், இவ் வீடுகள் வீட்டு வசதி வாரியத்திடம் விதிமுறைகளின்படி பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

**தஞ்சை நகராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்:**

1. தஞ்சை நகர் முழுவதும் சோடியம் ஒளி விளக்குகள் அமைத்தல்;

2. சாலைச் சந்திப்புகளில் போக்குவரத்துக் கட்டுப்பாடு படுகைகள் - Traffic Islands அமைத்து அவற்றின் பராமரிப்புப் பொறுப்பைத் தனியார் சேவை நிறுவனத்திடம் ஒப்படைத்தல்;

3. பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடைகள் அமைத்தல்;

4. நகராட்சி எல்லைக்குள் இணைப்புச் சாலைகள் புதுப்பித்தல்;

5. கூடுதல் தேவைக்கு நகரில் ஆங்காங்கே ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்;

6. புதிய பேருந்து நிலையம்;

7. மத்தியப் பேருந்து நிலையத்தைப் புதுப்பித்தல்;

8. நகரப் பேருந்து நிலையத்தைப் புதுப்பித்தல்;

9. புதிய கழிப்பிடங்கள் அமைத்தல்;

10. தற்போதுள்ள கழிப்பிடங்களைப் புதுப்பித்தல்;

11. கொசு ஒழிப்புப் போன்ற சுகாதாரப் பணிகள்

12. மாநாட்டின்போது நகரின் தூய்மையைப் பாதுகாக்க மிகச் சிறப்பாக மேற்கொள்ளத் தக்க முறையில் துப்புரவுப் பணிகள்.

**பொது சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறைப் பணிகள்:**

1. தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய தீவிரச் சிகிச்சைப் பிரிவு (IntensiveCareUnit)மற்றும் விபத்துச் சிகிச்சைப் பிரிவு (Trauma Ward) ஏற்படுத்துதல்.

2. மாநாட்டின்போது முதலுதவி அவசரச் சிகிச்சை மையங்கள் அமைத்தல்.

3. மாநாட்டின்போது பொது மக்களின் தேவைக்காக 2000 தற்காலிகக் கழிப்பிடங்கள் (RCAP Latrines) அமைத்தல்.

4. நோய்த் தடுப்பு, சுகாதாரப் பணிகள்.

**அஞ்சல் தலை**

இராஜராஜ சோழன் உருவம் பொறித்த நினைவு அஞ்சல் தலை, திருவள்ளுவர் நாணயம் ஆகியவற்றை, துவக்க நாள் விழாவில் வெளியிட தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

**ஆய்வரங்க நிகழ்ச்சிகள்**

உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் பேராசிரியர் நொபோரு கரஷிமா அவர்கள் தலைமையிலான ஆய்வரங்கக் குழு (Academic Committee) பொறுப்பில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிறப்பு நிலைக் கருத்தரங்குகள் (Seminars)நடைபெறவிருக்கின்றன. இக் கருத்தரங்குகளில் கலந்துகொள்ள உலகெங்கிலுமுள்ள 2500 தமிழியல் பேராசிரியர்களும் வருகைதர உள்ளனர். தமிழியலில் கீழ்க்காணும் 42 தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

1. பண்டைய இலக்கியம், 2. பண்டைய இடைக்கால இலக்கியம், 3. பிற்கால இடைக்கால இலக்கியம், 4. தற்கால இலக்கியம், 5. ஒப்பிலக்கியம், 6. குழந்தை இலக்கியம், 7. இலக்கிய நடையியல், 8. இலக்கியத் திறனாய்வு, 9. தத்துவமும் சமயமும், 10. இலக்கணம், 11. மொழியியல், 12. மொழி கற்பித்தல், 13. அகராதியியல், 14. மொழி பெயர்ப்பியல், 15. சுவடியியல், 16. ஆட்சித் தமிழ், 17. அறிவியல் தமிழ், 18. நாட்டுப்புறவியல், 19. வரலாறு, 20. சமூக வரலாறு, 21. வரலாற்றியல், 22. கல்வெட்டியியல், 23. தொல்லியல், 24. பண்பாட்டு மாந்தவியல், 25. சமூகவியல், 26. தமிழர் குடிபெயர்வு, 27. பன்னாட்டு உறவு, 28. அயல் நாடுகளில் தமிழரும், தமிழும், 29. உளவியல், 30. கல்வியியல், 31. தகவல் தொடர்பியல், 32. பண்பாட்டியல், 33. பொருளியல், 34. ஆடலும் இசையும், 35. நாடகமும் திரைப்படமும், 36. ஓவியம், 37. சிற்பம், 38. அரங்கக் கலைகள், 39, தொல்லறிவியல், 40. அறிவியலும், தொழில் நுட்பமும், 41. மருத்துவம், 42. சித்த மருத்துவம் முதலியன.

இதுவரை 700 அறிஞர்கள் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளப் பதிவு செய்துள்ளனர். இவர்களுள் 23 அயல்நாடுகளைச் சேர்ந்த 250 பேராசிரியர்கள் அடங்குவர். இவர்களைத் தவிர, அமெரிக்கா, இங்கிலாந்து, பின்லாந்து, இஸ்ரேல், ஜப்பான், சுவீடன், மொரிஷியஸ், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் 25 அறிஞர்கள் சிறப்பு அழைப்பாளர்களாகத் தமிழக அரசால் அழைக்கப் பெற்றுள்ளனர். அரசு அழைப்பின் பேரில் இம் மாநாட்டிற்கு


எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு
நினைவு மண்டபம்

வரும் இவ்வறிஞர்கள் அரசு விருந்தினர்களாகக் கருதப்படுவதால் அவர்தம் நாட்டிலிருந்து தஞ்சை வந்து செல்வதற்கான போக்குவரத்துச் செலவுகளை அரசே ஏற்கும்.

### வல்லுநர் குழுக் கூட்டம்

இம் மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள விழையும் அறிஞர்களிடமிருந்து இதுவரை பெறப்பட்டுள்ள 650 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கக் குறிப்புகள் (Abstracts) 26.8.94 மற்றும் 27.8.94 ஆகிய இரு நாட்களில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சார்ந்த 36 அறிஞர்களடங்கிய வல்லுநர் குழுக் கூட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு ஆய்வரங்கத்தில் வாசிப்பதற்குத் தகுதியுடைய தான 447 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்களும், தகுதியற்றவை என 203 ஆய்வுக் கட்டுரைச் சுருக்கங்களும் வகைப்படுத்தப் பெற்றன. ஆய்வரங்கத்திற்குத் தகுதியானவற்றில் அமர்வுகளின் எண்ணிக்கை ஏற்றவாறு 252 ஆய்வுக் கட்டுரைகள் வல்லுநர் குழு தரப்படுத்தி அளித்துள்ள வரிசையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

### சுற்றுலா ஏற்பாடு

மாநாடு முடிவடைந்தவுடன் தமிழகத்தின் கலை பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களைக் கண்டு களிக்கும் வகையில் 150 அயல் நாட்டறிஞர்களுக்கு ஒருவாரக் காலச் சுற்றுலாவிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### சிறப்புக் கலை நிகழ்ச்சிகள்

அயல்நாட்டறிஞர்களுக்கான சிறப்புக் கலை நிகழ்ச்சிகளுக்கும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இளங்கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலான கலை நிகழ்ச்சிகளுக்கும் (Classical Programmes) நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளுக்கும் சிறப்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தஞ்சாவூரில் 1995 சனவரி 1-ஆம் தேதி முதல் 5-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் சிறப்பு மலர், அறிவியல் மலர், மாணவர் மலர் என்று மூன்று மலர்களை வெளியிட அரசு கருதியுள்ளது.

### 1. சிறப்பு மலர்

சிறப்பு மலரில் தமிழ் இலக்கியம், பேரிலக்கியம், சிற்றிலக்கியம், இலக்கணம், தமிழ் இசை, நாட்டியம், நாடகம், மொழியியல், நிகண்டு, கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியம், சமயம், தொல்லியல், கல்வெட்டியல், காசியல், மானிடவியல், சமுதாய இயல், நாட்டுப்புறக் கலை, மருத்துவம், வரலாறு, கணணியியல், தமிழ்ப் பண்பாடு நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் பிற மொழி இலக்கியம், சிறுகதை, புதினங்களின் வளர்ச்சி, கவிதைகள் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகள் இடம்பெறும் வகையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தலைப்புகளில் கட்டுரைகள் இடம்பெற தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் 127 நபர்களிடமும், பிற மாநிலப் பேரறிஞர்கள் 21 நபர்களிடமும், அயல்நாட்டுப் பேரறிஞர்கள் 82 நபர்களிடமும் கட்டுரைகள் வேண்டப்பட்டுள்ளன.

இதுவரை பேரறிஞர்களிடமிருந்து 94 கட்டுரைகளும், 7 கவிதைகளும் வரப்பெற்றுள்ளன. தமிழ்நாட்டுப் பேரறிஞர்களிடம் இருந்து 74 கட்டுரைகளும், 7 கவிதைகளும், பிற மாநிலத்தவர்களிடமிருந்து 5 கட்டுரைகளும், அயல் நாட்டினரிடமிருந்து 15 கட்டுரைகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இக் கட்டுரைகளில் 7 கட்டுரைகள் ஆங்கிலக் கட்டுரைகள் ஆகும்.

இதில் ஒரு பகுதி தஞ்சை மாவட்டத்திலுள்ள பல்வேறு சிறப்புகளை, வரலாறு, கலை, சமுதாயப் பாரம்பரியங்களை எடுத்துரைக்கும் வகையில் அமைக்கப்படும். மாநாட்டு மலர், மிகச் சிறந்த தாளில் பல வண்ணப் படங்களுடன், என்றும் வைத்துப் பேணும் வகையில் எழில் மலராக வெளிவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2. அறிவியல் மலர்

மாநாட்டில் அறிவியல் கட்டுரை மலர் ஒன்று வெளியிடக் கருதப்பட்டுள்ளது. அம் மலரில் மருத்துவத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடைத்துறை மற்றும் பொறியியல் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களைக் கொண்டு, அறிவியல் கட்டுரை வெளியிட டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் தலைமையில் உட்குழு அமைக்கப்பட்டுள்ளது. "அறிவியலில் தமிழ் வழிக் கல்வி" என்னும் தலைப்பில் இலக்கிய இலக்கண, நயத்துடன் கட்டுரைகள் வெளியிட கால்நடைத் துறை வல்லுநர்கள் 29 பேர்களிடமும், வேளாண்மைத்துறை வல்லுநர்கள் 23 பேர்களிடமும், மருத்துவத்துறை வல்லுநர்கள் 33 பேர்களிடமும், பொறியியல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்கள் 28 பேர்களிடமும் (ஆகக் கூடுதல் 113 வல்லுநர்களிடமும்) கட்டுரைகள் வேண்டப்பட்டுள்ளன.

தற்போது வேளாண்மைத் துறை வல்லுநர்களிடமிருந்து 10 கட்டுரைகளும், மருத்துவத்துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும், கால்நடைத்துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகளும், பொறியியல் துறை வல்லுநர்களிடமிருந்து 4 கட்டுரைகள் (ஆக, கூடுதல் 22 கட்டு



அலங்கார நுழைவு வாயில்

ரைகள்) அறிவியல் மலருக்கு வரப்பெற்றுள்ளன.

அறிவியல் உட்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் இக் கட்டுரைகள் திருத்தம் செய்யப் பட்டு வருகின்றன.

**மாணவர் மலர்**

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாணவர்கள் பங்கு கொள்ளவேண்டும் என்ற கருத் தின் அடிப்படையில் பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர் களிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி நடத்தி அதில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாவதாகத் தேர்ந் தெடுக்கப்படும் மாணவர்களுக் குத் தனித்தனியே மாநாட்டில் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் நடத்த பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் பல் கலைக் கழகத் துணைவேந்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள் ளனர். போட்டிகள் நடத்தத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. சிறந்த கட்டு ரைகளும், ஓவியங்களும், கவிதை களும் மலரில் இடம் பெற்று, அது 'மாணவர் மலராக' மலரும்.

**மலர்க் குழுவால் நடத்தப் பெறும் போட்டிகள்**

இம்மாநாட்டில் இளைஞர் களையும், பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களை

யும் ஈடுபடுத்தி அவர்களின் கலை, இலக்கிய ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், பேச்சாற்றலை ஊக்குவிக்கும் வகையிலும் கீழ்க்காணும் போட்டிகளை நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

1. பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி

2. கல்லூரி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி.

3. இளைஞர்களுக்கான கவிதைப் போட்டி,

4. கல்லூரிபல்கலைக்கழக மாணவர்களுக்கான கவிதைப் போட்டி,

5. கல்லூரிபல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி.

6. பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி.

7. பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி

8. கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி.

இவற்றில், பேச்சுப் போட்டிகள் நீங்கலாக இதரப் போட்டிகளுக்கான விளம்பரங்கள் முக்கிய தமிழ் நாளிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் தமது படைப்புகளைப் பள்ளி–கல்லூரி பல்கலைக்கழகம் மூலமாக மலர்க் குழு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். இப்போட்டிகளில் மிகச் சிறந்த மூன்று படைப்புகள் அரசால் அமைக்கப்பட்டுள்ள தெரிவுக் குழுவால் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாநாட்டு நிறைவு விழாவில் நினைவுப் பரிசுகள் வழங்கப்படும். மிகச் சிறந்த படைப்புக்கள் மாணவர் மலரில் இடம் பெறும்.



முதல் பரிசு பெறும் ஓவியம் மாணவர் மலர் முகப்பு அட்டையில் இடம் பெறும்.

"இருபத்தொன்றாம் நூற்றாண்டை நோக்கி" எனும் தலைப்பில் நடைபெறும் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் பள்ளிக் கல்வி இயக்குநராலும், கல்லூரிக் கல்வி இயக்குநராலும் மாவட்ட ஆட்சித்தலைவரிகளின் ஒருங்கிணைப்புடன் பல்வேறு சுற்றுகளாக நடத்தப் பெற்று, இறுதிச் சுற்று மலர்க் குழுத் தலைவரான வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் சென்னையில் நடைபெறும்.

மாநில அளவில் நடைபெறும் இறுதிச் சுற்றில் கலந்து கொள்ளும் ஐந்து மாணவர்களில் மிகச் சிறந்தவர்களாக மூவர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மாநாட்டு நிறைவு விழாவில் நினைவுப் பரிசுகள் வழங்கப் பெறும்.

**மாநாட்டுச் செய்தி – மக்கள் தொடர்புப் பணிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள்**

மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து நாளிதழ்கள், திரையரங்குகள், தனியார் தொலைக்காட்சி அமைப்புகளில் விளம்பரமாக வெளியிடவும், மாநாட்டு நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு செய்தல், தொலைக்காட்சி, வானொலி மூலம் நேர்முக ஒளி, ஒலிபரப்ப ஏற்பாடு செய்யவும், மாநாட்டின் போது சென்னை, தஞ்சை நகரங்களில் தகவல் மையங்கள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாநாட்டின்போது சிறப்பு மருத்துவ ஏற்பாடுகள்**

தஞ்சை நகருக்கு வரும் அனைத்து முக்கிய நெடுஞ்சாலைகளிலும் தற்காலிக மருத்துவமனைகள் நிறுவவும், அவற்றில் முதலுதவி சிகிச்சைக்கான வசதிகளும், ஆம்புலன்ஸ் வசதியும் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் தஞ்சை நகரில் பல்வேறு இடங்களிலும் மருத்துவ மையங்கள் நிறுவவும் இரத்தச் சேமிப்பு வங்கி மூலம் அவசரத் தேவைக்காக உடனுக்குடன் சமாளிக்கவும் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.39 இலட்சம் செலவில் 24 படுக்

கைகள் கொண்ட விபத்து சிகிச்சைப் பிரிவும், ரூ.10 இலட்சம் செலவில் 100 KVA ஜெனரேட்டர் வசதியும் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

**உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் பேராசிரியர் திரு நோபோரு கரஷிமா அவர்கள் தஞ்சை வருகை**

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஆய்வரங்கக் குழுத் தலைவராக இம்மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடத்தும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் **(International Association of Tamil Research)** தலைவர் பேராசிரியர் திரு நோபோரு கரஷிமா பொறுப்பேற்றுள்ளார். இம் மாநாட்டின் ஆய்வரங்க ஏற்பாடுகளை நேரில் பார்வையிட **23.9.94** அன்று தஞ்சைக்கு வருகை புரிந்த பேராசிரியர் திரு கரஷிமா, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரை நேரில் சந்தித்துப் பேசுகையில், இம் மாநாட்டிற்காகத் தஞ்சை நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சிறப்புப் பணிகளையும், மாநாட்டில் கலந்துகொள்ள வரும் பேராளர்கள், பார்வையாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோருக்காகத் தங்குமிட வசதி, விருந்தோம்பல், போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் விளக்கிக் கூறினார். இப்பணிகள் நடைபெறும் இடங்களை நேரில் சுற்றிப் பார்த்த பேராசிரியர் திரு. கரஷிமா அவர்கள், இதுவரை நடைபெற்ற மாநாடுகளைவிட எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்காகத் தஞ்சை நகரில் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் தமக்குப் பிரமிப்பூட்டுவதாக அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



# கலைவாணர் ஒரு சகாப்தம்!

- பேரறிஞர் அண்ணா

கலைவாணர் தனி ஒரு மனிதர் அல்லர்; அவர் ஒரு 'சகாப்தம்'!

அவரோடு அந்தச் 'சகாப்தம்' முடிந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு சகாப்தம் இனித் தோன்றுவது அரிது!

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்க முடியும். மக்களின் கைதட்டலையும், மாலைகளையும் பெற முடியும். நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால், நம்முடைய கலைவாணரைப் போல, மற்ற எவரும் புகழ் பெற்றிருக்க முடியாது, புகழ் பெறவும் முடியாது.

கலைவாணர் மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்க வைத்தவர். உலகிலேயே இவர் ஒருவர்தான் மக்களிடம் தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞர் ஆவார். இவரைப் போன்ற நல்லுள்ளம் கொண்டோர் மிகச் சிலரே!

கலைவாணர் வெறும் நடிகராக 'மட்டும் வாழவில்லை. உலகத்தைத் திருத்திய உத்தமராக, தாமும் நல்லவராக மற்றவர்களையும் திருத்துபவராக, கருத்து கருவூலமாக வாழ்ந்தவர்.

மக்களின் மன அழுக்கு நீங்க – மூட நம்பிக்கை அகல – குருட்டுப் பழக்க வழக்கங்கள் ஒழிய – தாழ்ந்த மக்கள் தன்னுணர்ச்சி பெற – இதுவரை, இந் நாட்டில் எந்த நடிகரும் கலைவாணரைப் போல் பணியாற்ற முனைந்ததில்லை. இந்நாட்டில் மட்டும் அல்ல, வேறு எந்த நாட்டிலும் கூட இப்படிப்பட்ட நடிகர் ஒருவர் இருந்தது இல்லை; இனி இருக்கப்போவதும் இல்லை.

நெல்மணிகள் முற்றியதும் கதிர் சாய்ந்து, 'எங்களை எடுத்துச் செல்லுங்கள்' என்று கூறுவது போல, கலைவாணர் வாரி வாரி வழங்கினார். பணத்தை மட்டும் அல்ல, கருத்துக்களையும் வழங்கினார்.

**கலைவாணர் என்.எஸ்.கே. பிறந்த நாள் நவம்பர்-29.**

சிறு சேமிப்பு - உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

## உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.

## சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

**ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை**

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.




தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இல்வச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

**ஆணையர்,**

சென்னை மாநகராட்சி (சி.சே.பரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2.,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

*இயக்குநர், சிறு சேமிப்புத் துறை*
*சபர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை - 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA.7556.95

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23





